


# நினைவு கூர்ந்து செயல்படல்:

## மோதலுக்குப் பிந்திய சமூகங்களில் நினைவுச் சின்னங்களை அமைப்பது தொடர்பான கைநூல்

மனச்சாட்சி சார் மையங்களின் சர்வதேச கூட்டமைப்பு

# நினைவு கூர்ந்து செயல்படல்:

## மோதலுக்குப் பிந்திய சமூகங்களில் நினைவுச் சின்னங்களை அமைப்பது தொடர்பான கைநூல்


பிக்ஸ் காப்ரியேல் மற்றும் மொபிதுல் ஹொக் ஆகியோரின் பங்களிப்புக்களுடன்
இரேஷ்னி நாயுடு

# நன்றி நவிலல்

2010 இல் நடைபெற்ற ஆபிரிக்க பிராந்திய கூட்டத்தில் பங்கேற்ற நல்லாட்சி இயக்கம் (Campaign for Good Governance) (சியேரா லியோன்), நினைவுச்சின்னங்கள் மற்றும் புராதனச் சின்னங்கள் தொடர்பான கமிட்டி (Monuments and Relics Committee) (சியேரா லியோன்), சமூக செயற்பாட்டுக்கான தேசிய ஆணைக்குழு (சியேராலியோன்), சியேரா லியோன் மனித உரிமைகள் ஆணைக்குழு (சியேரா லியோன்), குடிமக்கள் முன்முயற்சி (லைபீரியா), கென்யா சமாதான வலையமைப்பு (கென்யா), கென்யாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு (கென்யா), அகதிகள் சட்ட கருத்திட்டம் (உகாண்டா) என்பவற்றின் பிரதிநிதிகள் வழங்கிய பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இக்கூட்டத்திலேயே இக்கைநூல் தொடர்பான எண்ணக்கருவும் மற்றும் அது குறித்த கருத்துக்களும் கலந்துரையாடப்பட்டன. தொடர்ச்சியாக பின்னூட்டங்களை வழங்கி, இக்கருத்திட்டத்துக்கு ஆதரவளித்து வந்ததுடன், இக்கைநூலின் பல்வேறு பாகங்கள் தொடர்பாக தமது கருத்துக்களை வழங்கிய (தென் ஆபிரிக்க) மனித உரிமைகள் ஊடக நிலையத்தைச் சேர்ந்த திருமதி ஷேர்லி கன் அவர்களுக்கும், கென்யா மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த திரு. டேவிஸ் மல்கோம்ப் அவர்களுக்கும், சியேரா லியோன் விசேட நீதிமன்றத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் செகு தும்புயா அவர்களுக்கும் விசேடமாக எமது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

# உள்ளடக்கம்


முகவுரை ........................................................................ 2

அத்தியாயம் 1: கைநூலின் தோற்றம் .................................... 6

அத்தியாயம் 2: நினைவுச் சின்னங்கள் மற்றும் நிலைமாற்றக் கால நீதி ........................................................ 12

அத்தியாயம் 3: நினைவுச் சின்னங்களை உருவாக்கும் ஒரு கருத்திட்டத்தை ஆரம்பித்தல் ...........................…. 27

அத்தியாயம் 4: கலந்தாலோசனை செய்தல் .............................. 34

அத்தியாயம் 5: நினைவுச் சின்னங்கள் இல்லாமல் நடத்தப்படும் நினைவேந்தல் நிகழ்வுகள் ................................ 41

முடிவுரை ........................................................................ 54



# முகவுரை

யஸ்மின் சூக்கா
தென்னாபிரிக்க உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு மற்றும் சியேரா லியோன் உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு என்பவற்றின் முன்னாள் ஆணையாளர்

**அனைத்து சமூகங்களிலும் நாம் நினைவேந்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்**

மோதல்கள், இனப்படுகொலை, பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், மாபெரும் மனிதாபிமான நெருக்கடியொன்றின் விளைவுகள் போன்ற பேரதிர்ச்சியை எடுத்து வரும் நிகழ்வுகளின் வரலாற்று நினைவுகளை பேணிக் காப்பதற்கென எமது சமுதாயங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் முன்னெடுக்கிறோம். இம்முன்னெடுப்பின்போது நிர்ணயகரமான ஒரு சில கேள்விகளை எதிர்கொள்கிறோம். அவையாவன:

"எமது சமுதாயத்தில் சமகால விவாதங்களை உருவாக்குவதில் "நினைவு (memory)" என்ன பங்கை வகிக்கின்றது? இது கட்டாயமாக ஒரு பாத்திரத்தை வகித்து வருகிறதா? சமூக மீள்கட்டுமானத்திலும், நிலைமாற்றக்கால நீதியிலும் நினைவுச் சின்னங்கள் வகித்து வரும் பாத்திரம் என்ன, அவை எடுத்து வரும் தாக்கம் என்ன; இந்த நினைவுச்சின்னங்கள் முன்னாள் எதிரிகளுக்கு மத்தியில் நல்லிணக்கத்தையும், சமூக மீள்கட்டுமானத்தையும் எவ்வாறு முன்னெடுக்க முடியும்? அல்லது இவ்வாறு நினைவுச் சின்னங்களை அமைக்கும் செயல் வன்முறை மோதலுக்கு வித்திட்ட முன்னைய பிரிவினைகள் அதே விதத்தில் தக்க வைத்துக் கொள்ளப்படுவதை அல்லது மேலும் தீவிரமடைவதை தூண்டாதிருப்பதனை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்வது எப்படி? எத்தகைய நினைவுகளை நாங்கள் பேணிக் காக்க வேண்டும்? எப்படி அதனைச் செய்வது? யாருக்காக நாம் செயற்பட வேண்டும்? பாரிய படுகொலைகள், இனஅழிப்பு போன்றவற்றைப் பொறுத்தமட்டில் 'நினைவு' எவ்வளவு தூரம் பயனுள்ளது? அரசியல்வாதிகள் அவர்களது சுயநலத்துக்காக பொதுமக்களின் நினைவுகளை கையாளுவதை கட்டுப்படுத்துவது எப்படி?"

கடந்த காலம் பற்றிய ஓர் உணர்வை அல்லது அர்த்தத்தை மக்கள் எப்படி உருவாக்குகின்றனர்É மற்றும் அந்த கடந்த காலத்தை அவர்களது நிகழ்கால நினைவுகூரல் செயற்பாட்டுடன் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றனர் என்பதனையே 'நினைவு' என்ற பதம் குறிக்கின்றது. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை அல்லது கால கட்டத்தை மக்கள் நேரடியாக அனுபவித்திருக்க முடியும்; அல்லது ஏனையோரால் கையளிக்கப்பட்டு வந்திருக்கும் கலாசார அறிவுத் தளமொன்றை அவர்கள் கூட்டாக பகிர்ந்து கொள்ள முடியும். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் ஓர் அனுபவத்தை பகிர்ந்து கொள்வது என்பது, கலாசார ரீதியில் பொருள் விளக்கமளிக்கும் சட்டகமொன்றை வைத்திருப்பதுடனும், அத்தகைய அனுபவங்கள் குறித்து சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும், கோட்பாட்டாக்கத்துக்கும் பயனுள்ள மொழியொன்றை அபிவிருத்தி செய்வதுடனும் சம்பந்தப்படுகிறது. இந்தக் கண்ணோட்டம், நினைவுகளை அனுபவங்களில் வேரூன்றியிருக்கும் ஒரு செயன்முறையாகவும், பொருள் சார்ந்த மற்றும் குறியீட்டுத்தன்மை சார்ந்த ஒரு செயன்முறையாகவும் நோக்குகிறது.

மோதலுக்கு பிந்திய சூழலில் சமூகங்கள் பல காரணிகளினால் பாதிக்கப்படுகின்றன. நடந்தவற்றை மறத்தல் மற்றும் நினைவுகூர்தல் ஆகிய இரண்டுக்குமிடையிலான நுட்பமான சமநிலையை பேணுவது மிகவும் கடினமானதாகும். சட்டம், அரசியல், கலாச்சாரம், அறநெறி போன்ற பல காரணிகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. நினைவுகள் கட்டமைக்கப்படும் விதமும், கதையாடல்கள் முன்வைக்கப்படும் விதமும் வேறுபடுகின்றன. சமூகங்கள் கடந்த காலத்துடனான தமது உறவுகளை

நிர்ணயித்துக் கொள்ளும் விதம் அவர்களுடைய நம்பிக்கைகள் சார்ந்தே அமைகிறது. வாழ்வு மற்றும் மரணம், சரி பிழை, நல்லது கெட்டது போன்றவற்றை குறித்த நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் சமூகங்கள் தமது கடந்த காலத்தை திரும்பிப் பார்க்கின்றன. முழுமையாக எதுசரி, எது பிழை என்பதனைக் கண்டறிய முடியாது. தீய செயல்களை அறிந்து கொள்ள முடியும். ஆனால், அவற்றைச் செய்தவர்கள் நாங்கள் அப்பாவிகள், சந்தர்ப்ப சூழ்நிலையால் இவ்வாறு நடந்துவிட்டது என்பார்கள். எனவே, இறந்தகாலத்தில் நடந்த உண்மைகளை கண்டறிதல் மிக முக்கியமானது. அப்போது தான் அந்தச் சமூகத்தில் நிகழ்த்தப்பட்ட வன்முறை, அதில் பாதிக்கப்பட்டவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கங்களை உணர்ந்து கொள்ளமுடியும். உண்மையைத் தேடுபவர்கள் நிகழ்வுகளை பின்னோக்கிப் பார்த்து, ஆழமாக சிந்திக்கும் பொழுது, சமூகம் வன்முறைச் சம்பவங்களினால் மிக மோசமான விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், அந்த வன்முறையை நிகழ்த்திய காரிய கர்த்தாகவும் அது இருந்து வந்துள்ளது என்ற விடயத்தை புரிந்து கொள்வார்கள். சமூகத்தினர் ஒன்றில் இந்த வன்முறைக்கு உடந்தையாக இருந்திருப்பார்கள்É அல்லது ஆகக் குறைந்தது அதனை தடுக்காமலாவது இருந்திருப்பார்கள். கொலை சித்திரவதை போன்றவற்றைச் செய்த குற்றவாளிகள் தொடர்ந்தும் அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களிலே பாதிக்கப்பட்ட மக்களோடு சேர்ந்தே வாழ்வார்கள்.

பாதிக்கப்பட்டவர்களும், பாதிப்பில் இருந்து தப்பிப்பிழைத்தவர்களும் காலப் போக்கில் அந்த மோதல் குறித்த ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கி, எவ்வாறான நினைவு கூரல்கள் தேவை என்பதனை உணர்ந்து கொள்வார்கள். நினைவுகூரல் நிகழ்வுகளுக்கூடாக புதிய ஜனநாயக கலாச்சாரத்தை ஏற்படுத்தி, "இனி ஒரு போதும் வேண்டாம்'' என்ற மனநிலையை உருவாக்குவதே முக்கிய நோக்கமாகும். இறந்தகால நிகழ்வுகளை மீட்டுப்பார்ப்பதற்காக கலாச்சார அறிவூட்டல், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நினைவு கூரல்கள் செயல்பாடு பெருமளவுக்கு வரலாற்று ஆவணச் சான்றுகளில் தங்கியிருக்கின்றது. இவ்வாறு ஆவணப்படுத்துவது வெறுமனே வெற்றி பெற்றவர்களின் வெற்றியை வெளிப்படுத்துவதற்காக அல்ல; இறந்தகால நிகழ்வுகளை நினைவுபடுத்துவதற்காகும். இரண்டாவதாக, கொள்கை தீர்மானங்கள் அல்லது விளைவு உருவாக்களின் போது இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் சார்ந்து உண்மையான கலந்தாலோசனை கொண்டதாக இருத்தல் வேண்டும். நினைவுகூரல் செயற்திட்டங்களின் போது தப்பிப் பிழைத்தோர் கலந்துரையாடல்களில் கட்டாயம் பங்குகொள்ள வேண்டியுள்ளதுடன், எதனை நினைவுகூர வேண்டும், மற்றும் எப்படி நினைவுகூர வேண்டும் என்பதுடன் சட்டத்தின் ஆட்சியை ஊக்குவிக்கும் வகையில் ஏனைய பல்வித முனைப்புகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அனேகமான நினைவாலயங்கள் மனச்சாட்சியின் மையங்களாகவும், உயிரோட்டமுள்ள சமாதானக் கல்வி நிலையங்களாகவும் திகழ்கின்றன. இன்று சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால், மோதல் சூழ்நிலையில் வாழாத தலைமுறையினருக்கு இந்த நினைவாலயங்களின் முக்கியத்துவத்தை எப்படி எடுத்து விளக்குவது என்பதாகும்.

பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மறக்கப்படுகின்றார்கள். அரசு நினைவுச் சின்ன கருத்திட்டங்களை முன்னெடுக்கும் பொழுது, பாதிக்கப்பட்ட மக்கள் வகித்த பாத்திரம் உதாசீனம் செய்யப்படுகின்றது. வெற்றியீட்டியவர்கள் கடந்த காலத்தை தாம் புரிந்து கொண்டுள்ள விதத்தில்

பதிவு செய்வதற்கு விரும்புகிறார்கள். உலகின் பல பாகங்களில் இது நடந்து வருவதனை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அரசுகள் தமது சொந்த வெற்றிக்களிப்பை கொண்டாடுவதற்காக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்களின் அனுபவங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றன என்பது தொடர்பான ஒரு படிப்பினையாக இது உள்ளது.

மோதலுக்குப் பிற்பட்ட உலகின் நினைவிடங்களைப் பொறுத்தவரையில் இது எதனைக் காட்டுகின்றது?

நினைவுகளை தொகுக்கும் செயன்முறை எமது கலாசாரங்கள் மற்றும் செழுமையான எமது சொந்த அடையாளம் என்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். அது மக்களை பிரிப்பதற்குப்

பதிலாக அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும். இளைஞர்கள் வகித்து வரும் பாத்திரத்தை கவனத்தில் எடுத்து, சம காலப் பிரச்சினைகள் குறித்து உரையாடல்களை நிகழ்த்தக் கூடிய இடங்களாக நாங்கள் நினைவிடங்களை உருவாக்க வேண்டும்.

நினைவு கூர்தல் நிகழ்வுகளை நடத்தும் போதும், நினைவிடங்களை உருவாக்கும் பொழுதும், பழைய வரலாற்று ஆதாரங்களை மீட்டெடுக்கும் பொழுது பொதுவாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் எனக் கோரும் சக்திகளுக்கும், மறப்போம், மன்னிப்போம் எனக் கோரும் சக்திகளுக்கும் இடையில் ஓர் அரசியல் போராட்டம் இடம் பெறுகிறது. இங்குள்ள முக்கியமான விடயம் உரையாடல்களுக்கான ஒரு வெளியை உருவாக்குவதாகும். நினைவையும், நினைவிடங்களையும் பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கு மத்தியில் பாலங்களை கட்டும் விடயத்தில் நாங்கள் ஒரு சவாலை எதிர்கொண்டு வருகிறோம். சமூக நீதி தொடர்பான பிரச்சினைகளை எழுப்புவதும் சவால்மிக்கதாக இருந்து வருகின்றது. நினைவிடங்களை நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்திலேயே உண்மையில் ஒரு சம்பாஷணை ஆரம்பமாகின்றது என்ற விடயத்தையும் நாங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இக்கேள்விகளில் பெரும்பாலானவற்றுக்கான பதில்களை இக்கைநூல் வழங்குகின்றது என நாங்கள் உரிமை கோரவில்லை. ஆனால், மனச்சாட்சி சார் மையங்கள் முன்னெடுக்கும் பணிகள், இக்கேள்விகள் ஒரு சில எடுத்து வரும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான எழுச்சியையும், புதுமைப் புனைவுமிக்க உதாரணங்களையும் எமக்குத் தருகின்றன. அந்த உதாரணங்கள் மோதலுக்குப் பிற்பட்ட உலகில் நினைவேந்தலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதுடன், நினைவு கூர்ந்து, செயல்படும் நிலைக்கு சமூகங்கள் எவ்வாறு நகர்ந்து செல்ல முடியும் என்பதற்கான வழிவகைகளையும் முன்வைக்கின்றன.




# அத்தியாயம் - 1

## மனசாட்சிசார் மையங்களின் அறிமுகம்

# மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டமைப்பு

இக்கூட்டமைப்பு மனச்சாட்சிசார் மையங்களின் உலகலாவிய வலையமைப்பாகும். இது வரலாற்று நினைவிடங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் கடந்த கால போராட்டங்களை நினைவு கூரும் செயற்பாடுகள் என்பவற்றை கொண்டுள்ளது. அமெரிக்காவின் கீழ்கிழக்கு பகுதி டெனமன்ட் (Tenement) அருங்காட்சியகம், ரஷ்யாவின் குலாக் (Gulag) அருங்காட்சியகம் மற்றும் தென்னாபிரிக்காவின் District Six அருங்காட்சியகம் என்பன போல் மனசாட்சிசார் சர்வதேச மையங்களின் சர்வதேச கூட்டமைப்பு மக்களின் கடந்த காலத்தை நினைவுபடுத்தி, அது குறித்த ஒரு சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தி, நீதியான எதிர்காலமொன்றுக்காக மக்களை செயற்படத் தூண்டுகின்றது. பொதுமக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கும், நேருக்கு நேரான கூட்டுச் செயற்பாடுகள் தொடக்கம் சர்வதேச மாநாடுகள் வரையிலான கற்றல் பரிமாற்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கும் இக்கூட்டமைப்பு அதில் உறுப்புரிமையை பெற்றிருக்கும் நினைவிடங்களுக்கு நேரடி நிதிப்படுத்தலை வழங்குகின்றது. மேலும், அது நினைவிடங்கள் மற்றும் மனச்சாட்சிசார் மையங்களுக்கான இயக்கம் என்பவற்றுக்கு ஆதரவு திரட்டுவதற்கென பரப்புரைகளையும் மேற்கொள்கின்றது. அது 47 நாடுகளில் 300 க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டிருப்பதுடன், 75 நாடுகளில் 3000 தொடர்பாடல் வலைப்பின்னல் அமைப்புக்களை கொண்டுள்ளது.

ஒரு மனசாட்சிசார் மையம் என்பது நினைவு கூரப்படும் ஓரிடமாகும். அந்த இடத்தில் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது குறித்த வரலாற்றையும், அந்நிகழ்வுகளின் சமகாலத் தாக்கங்களையும் முன்வைக்கும் ஒரு வரலாற்று நினைவிடமாக, இடம்சார் அருங்காட்சியகமாக அல்லது நினைவுச் சின்னமாக அது உள்ளது. மனச்சாட்சிசார் மையங்கள், பொது மக்களுடனான உரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக கொடூரம், துணிச்சல் அல்லது நாளாந்த வாழ்க்கை தொடர்பான கதைகளை எடுத்துக் கூறுகின்றன. இந்த உரையாடல்கள், குறிப்பிட்ட நினைவிடத்தை சமகாலத்தில் நாங்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் அந்நினைவிடத்தின் வரலாற்றுப் பின்புலத்தை எடுத்துக் காட்ட முயல்கின்றன. இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் தாம் வகிக்க வேண்டிய பாத்திரம் என்ன என்ற கேள்வியையும் அவை பார்வையாளர்களிடம் எழுப்புகின்றன.

### மனசாட்சிசார் மையங்கள் :

- குறிப்பிட்ட நினைவிடத்தின் பின்புலத்தில் வரலாற்றை நோக்குகின்றன;
- உடனடித் தீர்வுகளை வேண்டி நிற்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக உரையாடல்களைத் தூண்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றன;
- மனிதாபிமான, ஜனநாயக செயற்பாடுகளை முதன்மைச் செயற்பாடாக முன்னெடுக்கின்றன;
- அந்த இடத்தில் எழுப்பப்படும் பிரச்சினைகளில் பொதுமக்கள் சம்பந்தப்படுவதற்கு வாய்ப்புக்களை வழங்குகின்றன;

இந்த கூட்டமைப்பு பிரதேசம் சார்ந்த வலையமைப்புக்கள் மற்றும் தொனிப்பொருள் வலையமைப்புக்கள் என்பவற்றை கொண்டுள்ளது. உறுப்பினர்கள் மனச்சாட்சிசார் மையங்களின்

சார்ந்த உள்ளூர் வலையமைப்புக்களை உருவாக்குவதுடன், அவை கூட்டாக இணைந்து பொதுவான சமகாலப் பிரச்சினைகளை அணுகுகின்றன. எமது தற்போதைய பிராந்திய/ தொனிப்பொருள் சார் வலையமைப்புக்கள் வருமாறு:

**மனசாட்சிசார் ஆபிரிக்க மையங்கள் (**African Sites of Conscience) தெற்கு, கிழக்கு மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகள் காலனித்துவத்துக்கு பிற்பட்ட மற்றும் போருக்குப் பிற்பட்ட நிலைமாற்றங்களின் பின்புலத்தில் கடந்த காலத்தை நினைவு கூரும் நினைவிடங்களுடன் இந்த வலையமைப்பு பணியாற்றுகின்றது. ஜனநாயக மாற்றத்தில் பிரஜைகளின் பங்கேற்பு தொடர்பான மாதிரிகளை வலையமைப்பு உறுப்பினர்கள் கூட்டாக முன்வைப்பதுடன், வருங்கால மாற்றத்துக்கான உரையாடலையும், பங்கேற்பையும் தூண்டுவதற்காக இந்த வரலாறுகளை பயன்படுத்துகிறார்கள்.

**மனச்சாட்சிசார் ஆசிய மையங்கள் (Asian Sites of Conscience)** இந்த வலையமைப்பு ஆசிய மனச்சாட்சிசார் மையங்களுடன் இணைந்து பணியாற்றி வருவதுடன், இனத்துவ மற்றும் சமய பன்முகத்தன்மையை எடுத்துக் காட்டுவதற்கும், அந்த விழுமியங்களை மேம்படுத்துவதில் இளைஞர்களின் முனைப்பான பங்கேற்பை பெற்றுக் கொள்வதற்கும் மோதல் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றின் வரலாறுகளை அது பயன்படுத்துகின்றது.

**மனசாட்சிசார் ஐரோப்பிய மையங்கள் :- (European Sites of Conscience)** ஐரோப்பிய வரலாற்று நினைவிடங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் என்பவற்றினால் உருவாக்கப்பட்ட இந்த வலையமைப்பு, இன்றைய ஐரோப்பாவில் இடம்பெற்று வரும் பாரபட்சம் காட்டுதல், குடியகல்வு மற்றும் இன வெறுப்பு என்பன தொடர்பான பிரச்சினைகள் குறித்து உரையாடல்கள் ஆரம்பிப்பதற்கு முயல்கின்றது. இந்த வலையமைப்பு இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கென நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன, அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் சகிப்புத் தன்மை ஜனநாயக செயன்முறைகள் மற்றும் ஒரு ஐரோப்பிய பிரஜா உரிமையை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கென நினைவிடங்களின் தனித்துவமான வரலாறுகளை பயன்படுத்துகின்றன.

- **குடிவரவு மற்றும் சிவில் உரிமைகள் மனச்சாட்சிசார் நினைவிடங்கள்:** ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பியா எங்கிலும் இருக்கும் குடிவரவு அருங்காட்சியகங்களின் வலையமைப்பு, குடிவரவு தொடர்பான தற்போதைய உள்ளூர் மற்றும் தேசிய உரையாடல்களை தூண்டி விடும் பொருட்டு வரலாற்றுக் கண்ணோட்டத்தை பயன்படுத்துகின்றது. அது மனித நேய மற்றும் ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதுடன், அனைத்து பங்கீடுபாட்டாளர்களையும் குடிவரவு உரையாடலின் பார்வையாளர்களாக நடத்துகின்றது.

**மத்திய கிழக்கு மற்றும் வடஆபிரிக்க மனசாட்சிசார் மையங்கள் - (Middle East and North African Sites of Conscience)** அரேபிய அரசுகளின் வலையமைப்பு, அரசின் உத்தியோகபூர்வ கதைக்கு அப்பால் பன்முகப்படுத்தப்பட்ட வரலாறுகளை பிரதிபலித்துக் காட்டுவதற்கென ஆவணங்கள் மற்றும் பொதுவில் கிடைக்கும் சுவடிகள் என்பவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இந்த வலையமைப்பு இழப்பீடுகள், அடையாளம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஊழல், சித்திரவதை மற்றும் தடுத்து வைத்தல் என்பன தொடர்பான பிரச்சினைகளை கவனத்தில்

எடுத்து, கடந்த காலத்திலிருந்து நிலைமாற்றமடைந்திருக்கும் இச்சமூகங்களுக்கு மனித உரிமைகள் கலாசாரங்களுடன் கூடிய ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்ப முயல்கின்றது.

**ருஷ்ய மனசாட்சி மையங்கள்: (Russian Sites Of Conscience)** இந்த வலயமைப்பு ருஷ்யாவின் அருங்காட்சியகங்கள் மற்றும் வரலாற்று நினைவிடங்கள் என்பவற்றுடன் இணைந்து செயற்பட்டு வருவதுடன், வரலாறு மற்றும் எதேச்சாதிகார ஆட்சியின் பின்விளைவுகள் என்பன தொடர்பாக பொது மக்களின் விழிப்புணர்வைத் தூண்டுகின்றது. இன்று ருஷ்ய ஜனநாயகம் எதிர்கொண்டு வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கென பிரஜைகளின் முனைப்பான பங்கேற்பினையும் அது ஏற்றுக் கொள்கின்றது.

**இலத்தீன் அமெரிக்கா மனசாட்சிசார் நினைவிடங்கள்: (Latin American Sites Of Conscience)** இந்த வலையமைப்பு இலத்தீன் அமெரிக்காவில் இடம்பெற்ற அரச பயங்கரவாதத்தை நினைவு கூரும் நினைவிடங்களின் ஆற்றலை கட்டியெழுப்புகின்றது. இந்த சர்வதிகார ஆட்சிக் காலங்களின் போது என்ன நடந்தது என்பது பற்றியும், சர்வாதிகார ஆட்சிகளின்போது சமூகங்களின் மீது ஏற்பட்ட விளைவுகள் தொடர்பான நினைவுகளை பேணி பாதுகாப்பதற்கும் அது முயற்சிக்கின்றது. இந்த வலையமைப்பு அரசியல் கலாசாரத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு நினைவை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எதிர்கால தலைமுறையினருக்கு மத்தியில் எந்தவொரு வடிவத்திலும் எதேச்சதிகார ஆட்சி முறைகள் தோன்றுவதை தடுக்கும் பொருட்டு அது இளைஞர் சமூகத்தில் செயற்பட்டு வருகின்றது.

## இக்கைநூலின் பின்னணி

நீண்ட கால மோதல்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள் என்பவற்றை அடுத்து, சமூகங்கள் தமது கடந்த காலத்தை திரும்பிப் பார்ப்பதற்கென பலவிதமான பொறிமுறைகளை பயன்படுத்துகின்றன. குற்றம் இழைத்தவர்களை பொறுப்புக் கூற செய்வது எப்படி? மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களை அங்கீகரித்து, அவர்களுக்கு நீதியை உத்தரவாதப்படுத்துவது எப்படி? மற்றும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றுடன் கூடிய கலாசாரமொன்றை கட்டியெழுப்புவது எப்படி என்பன இச்சந்தர்ப்பத்தில் சமூகங்கள் கவனத்தில் எடுக்க முயற்சிக்கும் முதன்மையான கேள்விகளாக இருந்து வருகின்றன. நினைவு மற்றும் நினைவுச் சின்னம் என்பவற்றின் உருவாக்கம் தொடர்பான கேள்விகள், சமூகங்கள் தமது நிகழ்காலத்திலிருந்து கடந்த காலத்தை எவ்வாறு புரிந்து கொள்ள முயல்கின்றன என்ற விடயத்தின் ஒரு உள்ளார்ந்த அம்சமாக இருந்து வருகின்றது.

இத்தகைய ஒரு சில பிரச்சினைகளை தொடர்ந்து கையாளும் பொழுது, மோதலுக்கு பிற்பட்ட ஆபிரிக்க மனச்சாட்சி நினைவிடங்களின் வலையமைப்பு 2010 ஆம் ஆண்டில் ஒரு சந்திப்பை நடத்தியதுடன், மோதலுக்கு பிற்பட்ட பின்புலங்களில் தமது அனுபவங்களையும் நினைவுச் சின்னங்களை உருவாக்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களையும் பகிர்ந்து கொண்டன. இச்சந்திப்பில் சியராலியோன், கென்யா, லைபீரியா மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பங்குபற்றினார்கள். அவர்கள் நினைவுச் சின்னங்கள் உருவாக்கப்படுவதன்

முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்ட அதே வேளையில், நினைவுச் சின்னம் உருவாக்குவது தொடர்பான பிரச்சினையை தாம் பல்வேறு வழிகளில் அணுகுவதாக குறிப்பிட்டார்கள்: ஒரு சிலர் ஏற்கனவே நினைவு மற்றும் நினைவுச் சின்னம் என்பன தொடர்பான கேள்விகளை கவனத்தில் எடுத்து வந்ததுடன், ஏனையவர்களை பொறுத்தவரையில் உண்மையை கண்டறிதல், வகைப் பொறுப்புக் கூறுதல், இழப்பீடு செய்தல் மற்றும் பரவலான நிலைமாற்றக் கால நீதி தொடர்பான முயற்சிகள் என்பவற்றுக்கூடாகவே நினைவுச் சின்னங்கள் அமைக்கும் விடயத்தை அணுகியிருந்தனர். நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயற்பாடு மோதலுக்கு பிற்பட்ட நல்லிணக்கம் மற்றும் மீள் கட்டுமான செயன்முறைகளின் மிக முக்கியமான அம்சமாக உருவாகி வருகின்றது என்ற விடயத்தை பங்கேற்பாளர்கள் அவதானித்திருந்தார்கள்; எவ்வாறிருப்பினும், அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் போன்ற முன்முயற்சிகளை எடுக்கும் தரப்புக்களை பொறுத்தவரையில், நினைவுச் சின்னங்களை உருவாக்கும் முயற்சிகளின் ஒரு சில பரவலான குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த பொறிமுறைகளாக இருந்து வருபவை எவை என்பது குறித்து இன்னமும் முழுமையான புரிந்துணர்வு நிலவி வரவில்லை. நினைவுச் சின்னங்களை உருவாக்குவது என்றால் என்ன? நினைவுச் சின்னங்களை உருவாக்கும் கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பது எப்படி? மோதலுக்குப் பிற்பட்ட ஏனைய அபிவிருத்தித் தேவைகளிலும் பார்க்க நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமா? கடந்த கால எதேச்சாதிகார மற்றும் அடக்கு முறை ஆட்சிகளை நினைவூட்டும் நினைவுச் சின்னங்கள் தொடர்பான பிரச்சினையை கையாள்வது எப்படி? நினைவுச் சின்னங்களை உருவாக்கும் கருத்திட்டமொன்றின் முதன்மையான பங்கீடுபாட்டாளார்கள் யார்?

நினைவுச் சின்னங்களை உருவாக்குவது தொடர்பாக கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் பெரும்பாலான வளங்கள், மரபுரிமை அல்லது அருங்காட்சியக ஆய்வுகள் போன்ற திட்டவட்டமான துறைகளுக்கு வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்ற விடயத்தை அவர்கள் குறிப்பிட்டார்கள்; மேலும், மோதலுக்குப் பிற்பட்ட நினைவுச் சின்ன உருவாக்கச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துபவர்கள் நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயன்முறையின் பொதுவான கண்ணோட்டங்களையே கொண்டிருந்தார்கள். மாறாக, அவர்கள் மோதலுக்குப் பிற்பட்ட பின்புலங்களில் நினைவுச் சின்னங்களை உருவாக்குவது தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகள், சவால்கள் மற்றும் வெற்றிகள் என்பவற்றை ஆழமாக பகுப்பாய்வுச் செய்யவில்லை.

இந்த இடைவெளியை நிரப்பும் நோக்கத்தினையே இக்கைநூல் கொண்டுள்ளது. சர்வதேச கூட்டமைப்பின் முக்கியமான வழிகாட்டுதல் கோட்பாடுகளில் ஒன்று, பரஸ்பர கற்றல் மற்றும் கருத்துப் பரிமாற்றம் மிகச் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக் கொள்ளல் என்பன தொடர்பாக உறுப்பினர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதாகும். அந்த வகையில், இந்தக் கைநூல் ஒரு கூட்டு முயற்சியாக இருந்து வருவதுடன், மோதலுக்குப் பிற்பட்ட பல்வேறு சூழல்களில் செயற்பட்டு வரும் உறுப்பினர்களின் கதைகளிலிருந்து உள்ளீடுகளை பெற்றுக் கொள்கின்றது. இந்தக் கைநூல் 2012 யூன் மாதம் இடம்பெற்ற சந்திப்பில் பங்கேற்ற உறுப்பினர்களின் உள்ளீடுகளை பயன்படுத்தி செயலகத்தின் ஊழியர்களினால் உருவாக்கப்பட்டது.

நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயற்பாடு அந்தந்த பின்புலத்திற்கு உரியதாக இருந்து வருவதுடன், ‘அனைத்துக்கும் ஒரே அளவு’ என்ற அணுகுமுறை இருந்து வரவில்லை; எவ்வாறிருப்பினும், கூட்டமைப்பு உறுப்பினர்களின் பணிகளின் பன்முகத் தன்மையிலிருந்தும்,

உறுப்பினர்களின் நினைவிடங்கள் செயற்பட்டு வரும் பரந்த வீச்சிலான பின்புலங்களின் அடிப்படையிலும் இக்கைநூல் மோதலுக்குப் பிற்பட்ட சமூகங்களின் நினைவுச் சின்னங்கள் தொடர்பான நோக்கினை வழங்குவதற்கும், கற்றுக் கொண்ட பாடங்களை பகிர்ந்து கொள்வதற்கும் முயற்சிக்கின்றது. மேலும், நினைவிடங்களை உருவாக்கும் முயற்சிகளின் பொழுது எதிர்கொள்ள நேரிடும் ஒரு சில பொதுவான சவால்களை கையாள்வதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளை வழங்குவதன் மூலம் அது மிகச் சிறந்த நடைமுறைகளுக்கான வழிகாட்டுதல்களையும் முன்வைக்கின்றது. அந்த வகையில் இந்தக் கைநூல் மோதலுக்குப் பிற்பட்ட சமூகங்களில் குறிப்பிட்ட பல்வேறு சூழல் மற்றும் பல்வேறு மோதலுக்குப் பிந்திய தேவைகளுக்கமைய நினைவேந்தல் திட்டங்களை உருவாக்குவது தொடர்பான கேள்விகளுக்கு ஒரு வழிகாட்டுதலை வழங்க முடியும்.

இந்தக் கைநூல் மூலம் கற்றுக் கொள்ளும் ஒரு சமூகத்தை பலப்படுத்துவதற்கு ஒரு கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது, மாற்றத்தை தூண்டுவதற்கும், பொதுமக்களை நினைவு கூர்வதிலிருந்து செயலுக்குத் தூண்டுவதற்கும் இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.




# அத்தியாயம் 2

## நினைவுகூருதல் என்பது என்ன? நினைவுகூர்தலும் நிலைமாற்றக் கால நீதியும்



**நினைவுச் சின்னங்களின் உருவாக்கம் என்பது நினைவை நிரந்தரமாக நிலைக்கச் செய்யும் செயன்முறைகளையே குறிக்கின்றது.** அதாவது மதிப்பளித்தல், அங்கீகரித்தல், நினைவுகூரல் என்பதாகும். நினைவு கூருதல் என்பது மிகவும் புராதமான ஓர் எண்ணக் கருவாகும். 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நினைவுகூரப்படுதல் அறிவுப்புலம், அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் மிகமுக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாவது உலக மகா யுத்தம், அதன் பின்னர் உலகளாவிய ரீதியில் அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவே இந்நிலைமை தோன்றியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். யூத இன அழிப்பினையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள், ஒழுக்கம், நீதி மற்றும் அடையாளம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக உயர் அளவில் கரிசனை செலுத்தப்பட்டு வந்தது.[1] வன்முறையின் பின்னர் எழுச்சியடையும் சமூகங்களில் அதிகரித்து வரும் நிலைமாற்றக் கால நீதித் துறையின் மூலம் இதற்கு மேலும் ஆதரவளிக்கப்பட்டது. இச்சமூகங்கள் பாதிக்கப்பட்டவர்களின் பொருள் சார்ந்த, உணர்வு சார்ந்த மற்றும் தார்மீகத் தேவைகள் குறித்து கவனம் செலுத்தத் தொடங்கின.

அதன் பின்னர், நினைவு மற்றும் நினைவுச்சின்னங்கள் என்பன நிலைமாற்றக் கால நீதி செயன்முறைகளில் மைய நிலையிலிருந்து வந்துள்ளன. ஆர்ஜன்டினா, சிலி, தென்னாபிரிக்கா, சியரா லியோன், கம்போடியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. நினைவுகூரல் என்ற விடயம் உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைகளில் குறியீட்டு இழப்பு என குறிப்பிடப்படுவதுடன், இறந்த காலத்தை எதிர்கொள்ளும் விடயத்தில் இது உள்ளார்ந்த ஒரு பாகமாக இருந்து வருகின்றது என்ற விடயம் இப்போது பரவலாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், வரலாற்றில் இடம்பெற்ற குறைகளை நிவர்த்தி செய்வதிலும் நிலைமாற்றக் கால நீதி செயன்முறை ஒரு முக்கியமான பாகமாக உள்ளது. மோதலுக்குப் பிற்பட்ட நினைவுச் சின்ன உருவாக்கச் செயற்பாடு இழப்பீட்டு வகைக்குள் வருவதுடன், அது குறியீட்டு இழப்பீடு எனவும் குறிப்பிடப்படுகின்றது. அந்தச் செயல்பாடு பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரம் வழங்கி, பரவலான நல்லிணக்க செயன்முறைகளுக்கு பங்களிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. உதாரணமாக, தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரவலான நட்ட ஈட்டு உத்தியின் ஒரு பாகமாக குறியீட்டு ரீதியான இழப்பீடுகளை பரிந்துரை செய்திருந்தது. நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு, நல்லிணக்கத்தை சாதித்துக் கொள்ளவதற்கான வழிமுறைகளாக அவை கருதப்பட்டன. இங்கு நாங்கள் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் நினைவுச் சின்ன உருவாக்கச் செயற்பாடு, உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்கள் அல்லது வழக்கு விசாரணை போன்ற நிலைமாற்றக் கால நீதிச் செயன்முறைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை என்பதாகும். அவை உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளுக்கு வெளியிலும் இடம்பெற முடியும். எவ்வாறிருப்பினும், நினைவுகூர்தல் செயற்பாடு உண்மையைக் கண்டறிதல் மற்றும் வகைப் பொறுப்புக் கூறுதல்

[1] See Elazar Barkan, “Introduction: Amending Historical Injustices in International Morality” In The Guilt of Nations (John Hopkins University Press, 2000); Charles Maier, “Overcoming the Past? Narrative and Negotiation, Remembering and Reparation: Issues at the Interface of History and Law” in Politics and the Past: On Repairing Historical Injustices,” John Torpey (ed), (Rowman and Littlefield, 2003).

போன்ற நிலைமாற்றக் கால நீதியின் முக்கிய குறிக்கோள்களுக்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

நாம் நினைவுகூரலைப் பற்றி சிந்திக்கும்போது உடனே எமது நினைவுக்கு வருவது ஒரு சின்னம் அல்லது நினைவிடம், செங்கல், மற்றும் மண் கட்டுமான நினைவுச் சின்னங்களாகும். இவை நினைவுகூரலின் ஓரம்சம் மட்டுமேயாகும். ஆனால், நினைவுகூரல் மிக வலுவான, நிரந்தரமற்ற முன்முயற்சிகளை உள்ளடக்க முடியும். எனவே, நூதனசாலை, நினைவுகூரும் நிகழ்வுகள், மன்னிப்புக் கோரல், பொது இடங்களுக்கு மறு பெயரிடுதல், மீண்டும் இறுதிக் கிரியைகளை நடத்துதல், நினைவுகூரும் வேலைத்திட்டங்கள் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன.

இவற்றில் நினைவுச் சின்ன கருத்திட்டம் எது என நினைக்கிறீர்கள்?

## மோதலுக்குப் பிற்பட்ட மீள் கட்டுமானத்தின் போது நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான வாய்ப்பு

- **நல்லிணக்கம்** : எதிரெதிர் தரப்பினரை ஒன்றாக சேர்த்து ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், நினைவுகூர்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்பு பிரிந்திருந்த சமூகங்கள் மீண்டும் உறவுகளை கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பளிக்கிறது.
- **அங்கீகரிக்கப்படுதல்**: இது பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீள் இணைவதற்கு உதவுகிறது.
- **தேசிய அடையாளத்ததை உறுதிப்படுத்துதல்**: திரித்துக் கூறப்பட்ட இறந்த காலத்தை மீண்டும் புதிதாக நோக்குவதன் மூலமும், அனைத்துச் சமூகங்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் வரலாற்றை மீண்டும் எழுதுவதன் மூலமும் நினைவுகூரும் வேலைத்திட்டங்கள் ஜனநாயகம் மற்றும் தேசிய அடையாளம் குறித்து ஒரு புது யுகத்தை எடுத்து வர முடியும்.
- **சுகப்படுத்துதல்:** அநேகமான மோதல் சூழல்களில் காணாமல் போதல் மற்றும் பாரிய படுகொலைகள் போன்ற பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. சடலங்கள் கிடைக்காத நிலையில், நினைவிடங்கள் மக்கள் மரித்தோருக்கு அஞ்சலி செலுத்துவதற்கும், மரித்தோரை பிரதிபலிப்பதற்கும், நீண்டகால சுகப்படுத்தலுக்கும் வாய்ப்பளிக்கின்றன.
- **உண்மையை கூறுவதும் வரலாற்றை பக்கசார்பின்றி எழுதுவதும்:** மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தல் மூலம், நினைவுகூர்தல் வேலைத்திட்டங்கள் மோதலின் பின்னர் உண்மையைக் கண்டறியும் செயன்முறைக்கு உதவ முடியும். மேலும், நினைவிடங்கள் அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கான பௌதீக சான்றுகளையும் வழங்க முடியும்.
- **குடிமக்கள் பங்கேற்பு:** எதேச்சாதிகார ஆட்சி மற்றும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் என்பவற்றிலிருந்து மீண்டு வரும் சமூகங்களில் பொதுவாக மௌனம் காக்கும் கலாசாரமொன்றும், பொதுமக்களின் பங்கேற்பற்ற நிலையும் காணப்படுகின்றன. நினைவுச் சின்ன கருத்திட்டங்கள் நினைவு கூர்வதற்கு ஊடாகவும், நினைவிடங்களில் மேற்கொள்ளப்படும் கல்வியூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாகவும் ஆக்கபூர்வமான உரையாடல், கலந்துரையாடல் மற்றும் விவாதம் என்பவற்றை தூண்ட முடியும்.
- **இனி ஒரு போதும் வேண்டாம்**: கல்வி அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நினைவுகூரல் முயற்சிகள், மனித உரிமைகளை மதித்து, எதிர்கால வன்முறையை தடுக்கும் கலாசாரங்களை மேம்படுத்த முடியும்.

# நினைவு கூர்தல்

### செயல்பாடுகள்

நினைவு கூருதல் என்பது ஒரு சமூக, அரசியல் செயல்பாடாகும். அதனால் அது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவி வருவது இயல்பானதாகும். முரண்பாட்டுக்கு பிந்திய சூழ்நிலையில் மீள் கட்டுமான பணிகளுக்கு இந்தக் கருத்து முரண்பாடுகள் தடையாக அமைவதில்லை. ஆனால், ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். இவை சரியாக கையாளப்படாவிட்டால் நினைவேந்தல் நிகழ்வுகள் நன்மை செய்வதிலும் பார்க்க தீமையை எடுத்து வர முடியும். இறுதி விளைவு எப்படி அமையும் என்பதைப் பொறுத்தே நினைவு கூர்தல் வேலைத்திட்டத்தின் வெற்றி அமையும். தெரிவு செய்யப்பட்ட பணியின் இறுதி விளைவை பெருமளவுக்கு அது முன்னெடுக்கப்படும் செயன்முறையே தீர்மானிக்கும். மேலும், நினைவுச் சின்னங்களை உருவாக்கும் ஒரு கருத்திட்டத்தின் வெற்றி, பரவலான விதத்தில் சமூகத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதில் அது கொண்டிருக்கும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. நீண்ட கால ரீதியில் சமூகத்தின் பங்கேற்பை பெற்றுக் கொள்வதில் அது வகித்து வரும் பாத்திரமும் முக்கியமாகும்.

முரண்பாட்டுக்கு பிந்திய நினைவுகூர்தல் செயற்பாடுகள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபட முடியும். முரண்பாட்டுக்குப் பிற்பட்ட மீள் கட்டுமானப் பணிகள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகள் பலவற்றுக்கு அவை

பங்களிப்புச் செய்யலாம். சில வேளை ஒரு வேலைத்திட்டம் இன்னொரு வேலைத்திட்டத்தை ஒத்திருக்கும். மிகவும் முக்கியமான விடயம் வேலைத்திட்டம் சரியான இலக்கை கொண்டிருப்பதாகும். கீழே உள்ள சில உதாரணங்கள் நினைவு கூருதல், நிலைமாற்றக் கால நீதியை முழுமையாக அடைவதற்கு எவ்வாறு வழியமைத்துக் கொடுத்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

## நல்லிணக்கத்தை நோக்கிய நினைவேந்தல்

நிலைமாற்று நீதியின் ஒரு உள்ளார்ந்த பகுதியே நல்லிணக்கமாகும். ஆனால், “நல்லிணக்கம்” என்ற சொல்லின் சரியான பொருள் எது என்பது குறித்து ஒரு பொதுக் கருத்து இருந்து வரவில்லை. இச்சொல்லின் கருத்து சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடும். இதன் பொதுவான கருத்து எதிர்கால சமுதாய மீள்கட்டுமானப் பணிகளாகும். அதாவது, கடந்த காலம் குறித்த வரலாற்று விவரணங்களை[2] பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்வதன் அடிப்படையிலேயே நல்லிணக்கம் இடம்பெறுகிறது. முன்னைய பகைவர்களுக்கு மத்தியில் உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவது மட்டும் நல்லிணக்கமாகாது. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் உறவுகளை கட்டியெழுப்ப வேண்டியிருப்பதுடன், தலைமுறைகளுக்கிடையிலும் நல்லிணக்கத்தை எடுத்து வர வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கும் அவருடைய அல்லது அவளது சமூகத்துக்கும் இடையிலான நல்லிணக்கம், பாதிக்கப்பட்டவர் குழுக்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பனவும் அவசியமாகும்

இறந்த காலத்தை கருத்திற் கொள்ளாமல் நல்லிணக்கத்தை எடுத்து வர முடியுமா? எவ்வாறு நினைவுகூர்தல் வேலைத்திட்டங்கள் நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு உதவ முடியும்? இவற்றை நிலைமாற்றக் கால நீதியை வழங்கும் ஒரு பொறிமுறை இல்லாமல் செயற்படுத்த முடியுமா?

### குலாக் நூதனசாலை, பேர்ம் 36 ரஷ்யா (Gulag Museum At Perm 36 Russia)


குலாக் நூதனசாலையில் பார்வையாளர்கள்

சோவியத் ஆட்சியாளர்களின் 70 ஆண்டு கால நிர்வாகத்தின் பின்பு 1980 களின் இறுதிப் பகுதியில் சோசலிச ஆட்சி முடிவடைகிறது. அதுவரையில் மாற்று அரசியல் கருத்துக் கொண்டவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தவர்கள் 1930 களில் ஸ்டாலின் ஆட்சியில் தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் கட்டாய வேலை (Forced-Labor) முகாம்களில் அமர்த்தப்பட்டனர். நாட்டின் பொருளாதர வளத்தை பெருக்க மாற்று கருத்துடையவர்கள் இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். இம்முறை “குலாக்” என அழைக்கப்பட்டது.

[2] See Priscilla Hayner, *Unspeakable Truths: Transitional Justice and the Challenge of Truth Commissions*., (Routledge:2002)

Perm 36 என்ற சங்கேதப் பெயரில் அழைக்கப்பட்ட முகாம், ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குலாக் கட்டாய வேலை முகாம்களில் ஒன்றாகும். இந்த முகாம் யூரல் மலைகளில் சைபீரியாவின் தொலைதூர முனையொன்றில் அமைக்கப்பட்டிருந்தது. இன்று அது சோவியத் யுகத்தின் கட்டாய வேலை முகாம்களை நினைவுபடுத்தும் ஒரு வரலாற்று நினைவிடமாக, அருங்காட்சியகமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. 1970 களிலும், 1980 களின் தொடக்கத்திலும் சேர்கி கொவ்லோவ் மற்றும் வஸில் ஸ்டஸ் ஆகியோரையும் உள்ளடக்கிய பல சோவியத் மாற்றுக் கருத்தாளர்கள் Perm 36 சிறை முகாமில் வைக்கப்பட்டிருந்தமையினால் இது அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. இவ்வேலை முகாம் 1988 இல் மூடப்பட்டது. இதுவே இறுதியாக மூடப்பட்ட முகாமாகும். 1991 இல் முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளர்களும், வரலாற்றாசிரியர்களும் இக்கட்டாய வேலை முகாமை, பாதிக்கப்பட்டோரின் நினைவிடமாக மாற்றும் வகையில் அதனை இடித்தழிப்பதிலிருந்து பாதுகாத்து பேர்ம் 36 (Perm 36) ஐ குலாக் அருங்காட்சியகமாக மாற்றினர்.

குலாக் முகாமில் இருந்து மரித்தவர்களின் நினைவுக்கு இது 1995 இல் உத்தியோகபூர்வமாக அர்ப்பணிக்கப்பட்டது. இந்த முகாம் கடந்த கால கைதிகளையும், அக்கால காவல் பணியாளர்களையும் ஒன்றாக இணைக்கின்ற சுற்றுலா மையமாக இன்று உள்ளது. இவ்விடத்தில் நல்லிணக்கத்துக்கான எவ்விதமான நிகழ்ச்சி நிரலும் இல்லாதிருந்த போதிலும், “இனிமேல் சிறைக் காவலர்களுக்கு நூரம் பேர்க் பாணியிலான தண்டனை வழங்கப்படக் கூடாது” என்ற பொதுக் கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள்.[3] 1970 களில் அந்த முகாமில் அடைக்கப்பட்டிருந்த சேர்ஜி பொனோமர்யோ இப்படிச் சொல்கிறார்: “அங்கு பல நீதிமன்றங்கள் இருந்துள்ளன. ஏராளமாக இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது.” அங்கு ஒலித்த ஏகோபித்த குரல் “நாங்கள் இதனை நினைத்து வருந்துகின்றோம்” என்பதாகும். இந்தப் பயணம் மனித ஆன்மாவின் வெற்றியை எடுத்துக் காட்டியது. இச்சந்திப்பும், உரையாடலும் கைதிகளும், காவலர்களும் மனிதர்கள் என்ற முறையில் ஒருவரையொருவர் எதிர்கொள்வதற்கு வாய்ப்பளித்தது. தமது தனிப்பட்ட மீட்சி தொடர்பாக பல படிகள் முன்னே செல்வதற்கு அது அவர்களுக்கு உதவியது.

ஆனால், ஒரு முகாமில் நேரடி அனுபவங்களை எதிர்கொண்டிருந்த தனிநபர்களுக்கிடையில் நிலவி வரும் மனக் கசப்புக்களை போக்குவதிலும் பார்க்க, குலாக் தடுப்பு முகாம் கட்டமைப்பை நினைவுபடுத்தி, விழிப்புணர்வைத் தூண்டுவது பயனுள்ளதாக இருக்கும் என்ற விடயத்தை குலாக் அருங்காட்சியகம் உணர்ந்து கொண்டது. வரலாறு குறித்த நினைவுகள் முழுதாக மறக்கப்பட்டு வரும், திருத்தப்பட்டு வரும் ஒரு பின்புலத்தில் ஒரு கட்சிசர்வாதிகார ஆட்சி குறித்த மக்களின் விழிப்புணர்வைத் தூண்ட வேண்டுமென அது நினைத்தது. சோவியத் யூனியன் முறையான உண்மையக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக இன்னமும் கடந்த காலம் குறித்து பன்முகக் கண்ணோட்டங்களும் அதே போல பரவச உணர்வுடன் கூடிய கண்ணோட்டங்களும் காணப்படுகின்றன.[4] இந்த அருங்காட்சியகம் இந்த குலாக்

[3] *Back To The GULAG*, Newsweek magazine, October 24, 1995. http://www.newsweek.com/1995/09/24/back-to-the-gulag. html

[4] உபாய ரீதியான மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான நிலையம் 2003 ஆம் ஆண்டில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. அந்த கருத்துக் கணிப்பின் போது வயது வந்த ரஷ்ய மக்களில் கால் வாசிக்கும் மேற்பட்டவர்கள் ஸ்டாலின் உயிருடன் இருந்து, அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயமாக அல்லது அநேகமாக

முறை குறித்த ஒரு கல்வி நிலையமாக அதனை அடையாளப்படுத்தியதுடன், இன்று தாம் எதிர்கொண்டு வரும் சவால்களை, ருஷ்ய இளைஞர்கள், கடந்த காலத்திலிருந்து அவை எவ்வாறு வேறுபட்டதாக இருந்து வருகின்றன என்பது குறித்து விவாதிப்பதற்கும், ஒரு புதிய தலைமுறை என்ற முறையில் தாம் இந்தச் சவால்களை எவ்வாறு சந்திக்கப் போகின்றோம் என்பதனை தெரிந்து கொள்வதற்குமான ஒரு வெளியாக அது இருந்து வரும். உதாரணமாக, இந்த அருங்காட்சியகம் மாணவர்கள் தமது சொந்த குடும்ப உறுப்பினர்களை நேர்காணல் நடத்துவதற்கு அவர்களுக்கு உதவுகின்றது. இந்த நேர்காணல்களின் மூலம் சோவியத் கால கட்டத்தில் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் அனுபவங்களை மாணவர்கள் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். அநேகமாக முதல் தடவையாக இப்போது அந்தக் கால கட்டம் குறித்த உரையாடல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த முகாமின் வரலாற்றை பயன்படுத்துவதன் மூலமும் தமது குடும்பங்களின் வரலாற்றை பயன்படுத்துவதன் மூலமும், மாணவர்கள் ஜனநாயகம் மற்றும் அடையாளம் என்பன குறித்த தமது நோக்கினை எடுத்துக் காட்டும் விதத்தில் செயலமர்வுகள் நடத்துகின்றார்கள். சிறைக் காவலர்கள் மற்றும் கைதிகள் ஆகியோருக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதன் முதன்மையான பணியைத் தவிர இந்த அருங்காட்சியகம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அதன் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கூடாக பல்வேறு தலைமுறையினருக்கு மத்தியில் உறவுகளை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

## நினைவு கூர்தலும் உண்மையை கூறலும்

அடக்குமுறை ஆட்சி மற்றும் நீண்ட கால வன்முறை என்பவற்றிலிருந்து மீண்டு வரும் சமூகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று, எவ்வாறு இறந்த காலத்தை அணுகுவது என்பதாகும். வரலாறு திரித்து கூறப்பட்டதாகவும், கடந்த ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்படுகிறதாகவும் இருக்கும். எனவே, மறப்பது, மௌனம் காத்தல் என்பதற்கு மாறாக நிலைமாற்றக் காலத்தில் உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறைகளான உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுக்கள், சுவடிகளின் மீளாய்வு, காணாமல் போனவர்கள் தொடர்பான தடய அறிவியல் புலனாய்வுகள் பாதிக்கப்பட்டோர் தாங்கள் கடந்தகாலத்தில் அனுபவித்தவற்றினை அறிந்துகொள்ளும் தார்மீக உரிமையை பூர்த்திசெய்வதாக அமையும் என்பதுடன் நடந்த வரலாற்றை ஏற்றுக் கொள்வது

- மனித உரிமைகள் மீறப்பட்ட ஓரிடத்தில் தற்பொழுதிருக்கும் சான்றுகள், உண்மையைக் கண்டறியும் விசாரணைகளின் போது எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும்?
- உண்மையை எடுத்துக் கூறுவதற்கும், மறைக்கப்பட்ட, திரிக்கப்பட்ட இறந்தகாலத்தை அம்பலப்படுத்துவதற்கும் நினைவுச் சின்னங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும்?

---

அவருக்கு வாக்களிப்பதாக குறிப்பிட்டிருந்தார்கள். கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் 40% க்கு குறைந்தவர்கள் ஸ்டாலினுக்கு நிச்சயமாக வாக்களிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். வரலாற்றின் தவறுகளை சரி செய்வதனை நோக்கமாகக் கொண்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுச் செயன்முறைகள் இருந்து வந்த போதிலும், மனித நினைவின் இயல்பான வேறுபாடுகள் காரணமாக கடந்த காலம் குறித்து பன்முகப்பட்ட கண்ணோட்டங்கள் இருந்து வரும். வரலாற்று கதையாடல்கள் குறித்த கருத்து வேறுபாடுகள் இருந்து வரும் பின்னணியில், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு பெருங்கதை இருந்து வர முடியாது என மேயர் (2003) குறிப்பிட்டுள்ளார். எவ்வாறிருப்பினும், சமூகங்கள் இரண்டு மூன்று அடிப்படை கதைகளை தெரிவு செய்து கொள்ள முடியாது.

உசிதமானதாகும். நினைவுகூர்தல் செயற்பாடுகள் கடந்த காலத்தை மீண்டும் எழுதுவதற்கு ஒரு சிறந்த வழியாகும். இதில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் ஒழுங்குமுறையாக அவர்களின் அனுபவங்களை பதிவதோடு, உரிமை மீறல்களயையும் எடுத்துக் காட்டுகின்றார்கள். கடந்த கால வரலாற்றை மீண்டும் எழுதுவதன் மூலம் மனித உரிமை துஷ்பிரயோகங்களை ஆவணப்படுத்தி, மறுப்பவர்களையும், மௌனம் காப்பவர்களையும் நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியும். அது மட்டுமன்றி முன்னைய வதை முகாம்கள் அல்லது தடுப்பு முகாம்கள் போன்ற நினைவிடங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கான சாட்சியகங்களையும், உரிமை மீறல்களை தொடர்ந்து ஆவணப்படுத்துவதற்கான ஆதாரங்களையும் வழங்க முடியும்



## நியாயோ இல்லம் கென்யா (Nyayo House Kenya)

கென்யா 1885 ஆம் ஆண்டில் இருந்து காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தது. சுதந்திரப் போராட்டத்தின் போது பல சுழற்சியான வன்முறையும் பின்னர் அரசியல் பிரிவினைகளால் பல வன்முறைகளையும் சந்தித்துள்ளது. 1963 டிசம்பர் 12 ஆம் திகதி கென்யா சுதந்திர நாடானது. சுதந்திர கென்யாவுக்கான அரசியல் யாப்பு வரையப்பட்டது. கென்யாவின் அரசியல் வரலாற்றை நோக்கும்போது, அவர்களின் ஆட்சி முறை ஜனநாயகத்தை போஷித்து வளர்ப்பதற்கு பொருத்தமற்றதாகவே இருந்தது. அந்நாட்டு அரசாங்கங்கள் அடக்குமுறையை பிரயோகித்ததுடன், மனித உரிமைகளை மீறும் விதத்தில் செயல்பட்டன. காலனித்துவ ஆட்சிக்காலத்தின் போதும் (1895- 1963), பின் காலனித்துவ ஆட்சிக்காலத்தின் போது (அதாவது, 1963 இல் இருந்து இன்றுவரை) ஆட்சி செய்கிறவர்கள் அநீதியான நடைமுறைகளை நடைமுறைப்படுத்தி வந்தனர். குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்காத ஒரு கலாசாரம் அங்கு ஆழமாக வேரூன்றியிருந்தது, இந்தப் பின்னணியில், ஜனநாயகமாக்கல் தொடர்பான முயற்சிகளும் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நிலை மாற்றக்கால நீதி தொடர்பான செயல்பாடுகளும் பெருமளவுக்கு வெற்றியீட்டவில்லை. எவ்வாறிருப்பினும், 2002 இல் ஜனாதிபதி மோயின் தலைமைத்துவத்தின் கீழ் கென்ய ஆபிரிக்க தேசிய யூனியன் (KANU) சர்வாதிகார ஆட்சி அகற்றப்பட்டமை போன்ற ஒரு சில வெற்றிகள் அங்கு சாதித்துக் கொள்ளப்பட்டிருந்தன.[5]

மொய் (Moi) ஜனாதிபதியினுடைய ஆட்சிக் காலத்தில் நியாயோ இல்லம் அநீதி நிறைந்த இடமாக இருந்தது. மாகாண தலைமையகம் நைரோபியில் அமைந்திருந்தது. ஜனாதிபதி மொய்யின் ஆட்சிக்காலத்தில் இவ்விடம் 1980 களிலும், 1990 களிலும் ஓர் அரசாங்க சேவை நிலையமாக

[5] Malombe, D and Kilyata, T. (2008). *Memorialization and Transitional Justice in Kenya: A Cursory View*. Unpublished briefing paper.

இயங்கி வந்த அதே வேளையில், கடந்த பல வருடங்களாக இரகசிய சித்திரவதை முகாமாகவும், தடுப்பு முகாமாகவும் இருந்துள்ளது. கைதிகள் பலவந்தமாக சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் சிறையிருப்பு அறைகளில் நீர் நிரப்பப்பட்டும். வெப்பமேற்றப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டனர். நியாயோ இல்லத்தின் ஒன்பதாவது மாடியில் புலனாய்வாளர்களால் பலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். இவ்வாறான சித்திரவதை அறைகள் கட்டடத்தின் நிலத்திற்கு கீழே அமைக்கப்பட்டிருந்ததை அவ் அரச கட்டடத்தை திருத்தும்போது கண்டுபிடித்தனர். இன்றும் அவ்விடத்துக்கு அரச வேவை கட்டடம் என்பதால் மக்கள் செல்லக்கூடியதாக உள்ளது.

இந்த அரச கட்டடம் 2003 ஆம் ஆண்டு மக்களுக்கு அம்பலப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி கிபாகியின் அரசாங்கத்தின் நீதி அமைச்சர் தலைமையிலான ஒரு குழுவே இதனைச் செய்தது. அவ்விடம் நினைவாலயமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது என நீதி அமைச்சர் கூறியிருந்தார். ஆனால், அரசாங்கம் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புக்கள் இதை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியிருந்தன. அவ்விடத்தை தேசிய மரபுரிமை பிரதேசமாகவும், உண்மையை வெளிக்கொணரும் இடமாகவும் பயன்படுத்தும்படி கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. நியாயோ இல்லம் மொய்ஸ் காலத்தில் அதிகாரபூர்வமான சித்திரவதைக்கூடமாக செயற்பட்டுள்ளது. அவரின் ஆட்சிக் காலத்தில் உப ஜனாதிபதியாக இருந்த கிபாகி (Kibaki) பின்னர் ஜனாதிபதியானார். எனவே, இந்த இடத்தை ஒரு சித்திரவதை நினைவிடமாக பிரகடனப்படுத்துவது தற்போதைய ஜனாதிபதிக்கும் பிரச்சினைகளை எடுத்து வர முடியும்.

ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இன்றுவரை இச்சிறையறைகளை ஒளியூட்டி, நிறம்தீட்டி பராமரித்து வருகின்றன. 2008 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்கள் கென்யாவின் மனித உரிமை ஆணைக்குழு தலைமையில் நீதித் துறையினரிடம் இடைக்கால தடையை கோரினார்கள். அந்த இடத்தை மறுசீரமைக்காது, அதே நிலையில் பராமரிக்கும்படி அரசைக் கோரினார்கள். இக்குழுவினர் நீதித் துறையினரிடம் அந்த அறைகளின் அமைப்பு, எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டது என்பதற்கான ஆதாரமாக உள்ளது என்று வாதிட்டனர். சித்திரவதைக்கூடத்தில் பார்க்கக்கூடியதாக இருந்த சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் புனரமைப்பு என்ற பெயரில் இல்லாமல் செய்யப்படுகின்றன என்றும் வாதிட்டனர். இவற்றை ஆராய்ந்த நீதித் துறையினர் கட்டடத்தை புனரமைப்பதற்கான இடைக்காலத் தடை உத்தரவை 2009 பெப்ரவரி 16ம் திகதி வெளியிட்டனர்.

நியாயோ இல்லத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதித்துறை இதுவரையில் வழங்கியுள்ள நிவாரணங்கள்: 2010 யூலை மாதம் 21 சித்திரவதை செய்யப்பட்டதற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்த 21 பேருக்கு இழப்பீடாக 40 மில்லியன் கென்யன் ஷிலிங் கொடுக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது ஒரு திருப்புமுனையாக நோக்கப்பட்டதோடு, இது கென்ய உண்மை, நீதி, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறைக்கு புரம்பாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நியாயோ (Nyayo) இல்லத்தை தொடர்ச்சியாக மறுசீரமைக்காது அதேபோல பாதுகாக்கவும், சித்திரவதை செய்யப்பட்டவர்கள் சென்று பார்வையிடவும், அவர்களின் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

## நினைவுச் சின்னங்களுக்கு ஊடாக பொதுமக்கள் பங்கேற்பு

மௌனம் காத்தல், திரித்துக் கூறுதல் மற்றும் அடக்குமுறை என்பன எதேச்சாதிகார ஆட்சிகளின் பண்புக் கூறுகளாகும். மனித உரிமைகள் மதிக்கப்படுகின்ற ஜனநாயக கலாச்சாரத்தை சமூகத்தில் உருவாக்கி, வன்முறைகள் மீண்டும் சமூகத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு, வன்முறைக்குப் பிந்திய சமூகங்கள் சமூகத்தின் இறந்தகால சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு, நிவர்த்தி செய்ய வேண்டும். அத்தோடு எதிர்கால சகவாழ்வுக்கான சமாதானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

நிலைமாற்றுக்கால நீதி செல்நெறிகையும் பொறிமுறையும் பெரும்பாலும் அரசியல் மேட்டுக்குடியினருக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கையில் நினைவுகூரும் நிகழ்ச்சித் திட்டங்கள், அதன் அனைத்து கட்டங்களிலும் இறந்த காலம் மற்றும் எதிர்கால தூரநோக்கு பற்றிய விவாதங்கள், கலந்துரையாடல்களில் பரந்துபட்ட பொதுமக்கள் பங்கேட்க வாய்ப்பளிக்கின்றது.

நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயற்பாடு எப்போதும் தாக்கத்துக்குரியதொன்றாகும். அதனை மிகவும் அவதானமாக அணுகி வசதிப்படுத்தினால் நிர்மாணகரமான மக்கள் பங்கேற்பிற்கும், விவாதத்திற்கும் உறுதுணையாக அமையும். மூலவளங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும் நிலையில், நினைவேந்தல் தளங்கள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக நடைமுறையிலுள்ள, மக்களின் பங்கேற்பையும் , கலந்துரையாடலையும் உறுதிசெய்ய முடியும்.

### சியரா லியோனின் சிறப்பு நீதிமன்றம்



சியாரா லியோன் சிறப்பு நீதிமன்றத்தில் நீதி, மன்னிப்பு மற்றும் நல்லிணக்கம் போன்ற பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் பார்வையாளர்கள்.

சியரா லியோனில் 1991 ஆம் ஆண்டு புரட்சிகர ஐக்கிய முன்னணி (Revolutionary United Front) அரசியல் சதியொன்றில் ஈடுபட்டது. இதனால் பதினொரு வருடங்கள் அந்நாட்டில் கொடிய உள்நாட்டுப் போர் நடைபெற்றது. மோதல்களை தடுப்பதற்கான பலவித உள்நாட்டு, பிராந்திய, சர்வதேச முயற்சிகள் 1996 – 1999 காலப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டன. 2002ம் ஆண்டு போர் முடிவுற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. சியராலியோனின் உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (Truth and Reconciliation Commission TRC) “லோம் சமாதான உடன்படிக்கை” என்ற சமாதான உடன்படிக்கை 2000இல் உருவாக்கப்பட்டது. மோதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இறந்த காலத்தில் நடந்ததைப் போன்ற விடயங்கள் மீண்டும் நடைபெறாதிருப்பதனை உறுதிப்படுத்தும் நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இதன் நோக்கமாக இருந்து வந்தது. அரசாங்கத்திற்கும் புரட்சிகர ஐக்கிய முன்னணிக்குமான (*RUF*) மோதல்களால் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பாலியல் வல்லுறவுகள், பாலியல் வன்முறைகள்

நிகழ்ந்தன. அத்தோடு இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. அநேகர் அங்கவீனமாக்கப்பட்டார்கள். இவ்வாறான அதிகரித்த மனித உரிமை மீறல் வன்முறைகள் மற்றும் எண்ணற்ற கொடுமைகள் இக்கால கட்டத்தில் இடம்பெற்றன. சமாதான உடன்படிக்கையின் 'ரத்துக்களின் அடிப்படையில், போராளிகளுக்கும், தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் ஒரு பாகமாக இருந்து வந்த சுருகு உறுப்பினர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கக் கூடிய நிலை இருந்து வந்தது. ஆனால், சியாரா லியோன் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் சுருகு தலைவர் கைது செய்யப்பட்டதையடுத்து, ஐ. நா. பாதுகாப்புச் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தின் பிரகாரம், பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு பொறுப்பாக இருந்து வந்த தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கென சியாரா லியோன் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

சியரா லியோனின் உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கக் குழுவும் (TRC) சியராலியோன் சிறப்பு நீதிமன்றமும் (SCSL) ஒன்றாக இணைந்து செயல்படுவதை பாதிக்கப்பட்டவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். இந்த இரு அமைப்புக்களும் தகவல்களை பரிமாறிக் கொண்டால், பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்களுக்கு எதிராக மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவியது. அத்தோடு சியராலியோனின் அனேக மக்கள், தமது ஆட்சியாளர்கள் தமக்கு நீதி வழங்குவார்கள் என்ற நம்பிக்கையை இழந்தனர். விடுதலை செய்யப்பட்ட அடிமைகளுக்கான முதலாவது குடியேற்றத்தை நிறுவதன் மூலமும், உப சகாரா ஆபிரிக்காவின் முதலாவது பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்ததன் மூலமும் வரலாற்றில் இடம்பிடித்த நாடான சியாரா லியோன் இன்று ஆபிரிக்காவின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. ஆளுகை மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பான சவால்களை அது எதிர்கொண்டுள்ளது. தனது பொருளாதாரத்தையும் சமூக – அரசியல் சட்டமைப்பையும் மீண்டும் கட்டியெழுப்பும் அதே வேளையில், வன்முறை தோய்ந்த வரலாறு மற்றும் ஆட்சியில் ஏற்பட்டுள்ள தோல்விகள் என்பன தொடர்பான பிரச்சினைகளை சியாரா லியோன் எவ்வாறு கையாளப் போகின்றது? ஜனநாயகத்தை கட்டியெழுப்பும் பணியில் சாதாரண பிரஜைகள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது எவ்வாறு? முற்றும் சமாதான கலாசாரத்தை கட்டியெழுப்புவதிலும் நீதி விடயங்களிலும் எவ்வாறு ஈடுபடுவது?

சியராலியோன் சிறப்பு நிதிமன்றம் அதன் செயற்பாடுகளை முடித்துக் கொள்வதற்குத் தயாராகி வரும் நிலையில், பிரிடவுண் நகரில் இந்நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கும் 11.4 ஹெக்டயார் நிலப்பரப்பையும், அதில் உள்ள பொது வசதிகளையும் இனிமேல் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து அது சிந்தித்து வருகின்றது.

தற்பொழுது இந்த அமைவிடத்தின் ஒரு பாகம் சியாரா லியோன் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் செயற்பாடுகள் நிறைவடைந்ததுடன், மிகுதிப் பாகம் கையளிக்கப்படவுள்ளது. 2010 ஆம் ஆண்டு இந்த தடுப்பு முகாம் சியராலியோன் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு கையளிக்கப்பட்டது. அவ்விடம் பெண்கைதிகளையும் வலியோரையும் தடுத்து வைக்கின்ற இடமாக இருந்து வருகின்றது. அத்தோடு சியரா லியோன் சட்டக்கல்லூரி அதன் ஒரு பகுதியை வகுப்புக்களுக்காக பயன்படுத்துகிறது. நீதிமன்ற கட்டடத்தின் மேலதிக திட்டங்கள் சியராலியோனின் உயர்நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. சமாதான பூங்காவாக அவ்விடத்தை மாற்றுகின்ற திட்டம், நினைவுகூர்தல் மற்றும் சமாதான நூதனசாலை மோதல்களின் போது

பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக நிர்மாணிக்க இருந்தனர். அதேபோல் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்டல் போன்றவற்றை ஆவணப்படுத்தி வைப்பதோடு, வரலாற்றை பாதுகாப்பது சமாதான நூதனசாலையின் இலக்காக இருந்தது. அத்தோடு மோதலுக்கு பின்பு சிறந்த சமாதானத்தை ஏற்படுத்தி இறந்தகால நினைவுகளை மையப்படுத்தி, மனித உரிமையை மதிக்கின்ற புதிய கலாசாரத்தை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டதோடு, நல்லாட்சியையும் மோதல் அற்ற சூழ்நிலையையும் உருவாக்க செயற்பட்டனர்.

சமாதான நூதனசாலையை நிர்வகிக்கின்ற குழுவில் (The Peace Museum Management Team) அரசாங்க அங்கத்தவர்கள், ஐக்கியநாடுகள் பிரதிநிதிகள் ஆகியோர் உள்வாங்கப்பட்டனர். சியராலியோன் சிறப்பு நீதிமன்றம் தேசிய மனித உரிமைக் ஆணைக்குழு, தேசிய நூதனசாலை, போரினால் பாதிக்கப்பட்டவர்கள் அமைப்பு, சிவில் சமூக அமைப்புக்கள் போன்றவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் சமாதான நூதனசாலையை நிர்வகிக்கிற குழுவில் அங்கம் வகித்தனர். இந்த பன்முகப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்பட உள்ள வேலைத்திட்டம் பன்முகத்தன்மையுடன் அனைத்து சியராலியோன் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக விளங்கியது. சமாதான நூதனசாலையை அபிவிருத்தியடையச் செய்து, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்ற கொடூர செயல்பாடுகளை கண்டறிவதற்காக நூதனசாலையை மற்ற பிரதேசங்களோடு தொடர்புபடுத்தினர்.

அத்துடன் தொடர்ச்சியான வேலைத்திட்டங்களுக் கூடாக சிவில் சமூக அமைப்பினரை ஒன்று கூட்டி, விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தினர். சமாதான நினைவுகூர்தல் குழுவினர் நிதி உதவி கொடுத்து, அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை பொதுமக்களுக்கு நடாத்தி, மக்களை அறிவூட்டி, சமாதான நினைவு கூர்தல் நோக்கங்களை முன்னெடுத்துச் சென்றனர். இதற்கு மேலாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு அறிவூட்டுவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தனர். அத்தோடு அவர்களிடம் இருந்து சுய அனுபவங்களை சேகரித்து பொருத்தமானவற்றை நூதனசாலையில் சேர்த்துக் கொண்டனர்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்பட்டு பத்து வருடங்களின் பின்பே மக்கள் இக்குழுவினரிடம் மோதல் காலத்தில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முன்வந்தனர். போர்க் குற்றங்களைச் செய்து, பொது மன்னிப்பை பெற்றுக் கொண்டிருந்த அல்லது உண்மையை கண்டறியும் ஆணைக்குழுச் செயற்பாடுகளிலிருந்து வேண்டுமென்றே ஒதுங்கியிருந்த சமூகத்தின் ஏனைய சில நபர்கள் இது குறித்து தமது சந்தேகங்களை தெரிவித்தனர். சமாதான நூதனசாலையின் வெளியிட நிகழ்ச்சித்திட்டங்கள் உண்மையைக் கண்டறியும் செயன்முறையின் ஒரு பாகமாக இருந்து வருகின்றது என அவர்கள் நம்பினார்கள்.

சமாதான நூதனசாலை குழுவினர் (PMT) மற்ற சமூகங்களின் கருத்துக்களையும் அறிந்து, அநேக அறிவூட்டல் வேலைத்திட்டங்களை மக்களின் பங்களிப்போடு வரையறுக்கப்பட்ட வளவாளர்களுடன் முன்னெடுத்தனர். எப்படி இருந்தாலும் இன்றுவரை அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையில் உள்ளது. சமாதான நூதனசாலையின் மூலவளங்கள் வரையறைக்குட்பட்டதாக இருந்த போதிலும், அவர்கள் நீதி, மனித உரிமை தொடர்பான மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகான முனைந்தனர்.

பிரீடவுண் நகரைச் சேர்ந்த நல்லாட்சிக்கான இயக்கம் என்ற அரசு சாரார அமைப்பு[6] 2010 இல் மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டமைப்புடன் இணைந்து இளைஞர்களின் பங்கேற்புடன் தொடரான பல கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. வன்முறை, நல்லிணக்கம் என்பன குறித்தும், சியாரா லியோன் தேசத்துக்கான தமது தூர நோக்கு இலட்சியம் குறித்தும் அவர்கள் உரையாடினார்கள். நீதி, மன்னிப்பு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுடன் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்தக் குழு சியாரா லியோன சிறப்பு நீதிமன்றக் கட்டடத்தை பயன்படுத்திக் கொண்டது.

இந்தப் பிரச்சினைகளை மையப்படுத்தி இளைஞர்கள் கூறினார்கள்: மன்னிப்புக் கேட்டல் இணக்கப்பாட்டுக்கு மிக முக்கியமானது. ஏனென்றால், நீதியும் இணக்கப்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை. 16 தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்டவர்கள் கலந்துரையாடலில் பங்கேற்றனர். மோதலின் கொடூரத்தன்மை அவர்களை இன்று எவ்வாறு பாதித்துள்ளது. பாடசாலைகளின் வன்முறை கலாசாரம் ஏற்படுவதற்கு மூலகாரணம் இறந்த காலத்தில் அவர்கள் சூழலில் இருந்த மோதல் கலாச்சாரமா என்று ஆராய்ந்து இறுதியாக திறந்த கலந்துரையாடல் மூலம் அவர்கள் நாட்டுச் சூழலை அறிந்து, அவர்கள் நாட்டை கட்டி எழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை தயாரித்தார்கள்.

## வன்முறைகளிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு அங்கீகாரம் அளித்தல்

நிலைமாற்றக் கால நீதிச் செயன்முறையின் மிகவும் சவால் மிக்க அம்சங்களில் ஒன்று அப்பட்டமான மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருக்கும் நபர்களை மிகச் சிறந்த முறையில் அங்கீகரிப்பது எப்படி என்பதாகும். நட்டஈடு வழங்குதல், அதே நிலைமையை மீண்டும் கொண்டு வருதல், குறியீட்டு ரீதியான இழப்பீடு மற்றும் புனருத்தாரணம் போன்ற பல்வேறு இழப்பீட்டு வடிவங்கள் இதனால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை கருத்தில் கொள்வதற்கென பரிந்துரை செய்யப்படுகின்றன. அவர்கள் அனுபவித்திருக்கும் துன்பத்தை அங்கீகரிப்பதற்கும், அவர்களை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. நினைவுச் சின்னங்கள் அதற்கான நினைவுகூரும் நாட்கள் மற்றும் ஏனைய நினைவேந்தல் செயற்பாடுகள் போன்ற குறியீட்டுத் தன்மை வாய்ந்த இழப்பீடுகள் ஒரு பாகமாக அமுல் செய்யப்படும் பொழுது, ஒரு மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவது மட்டுமின்றி, சமூகம் எதிர்கொண்டிருக்கும் உரிமை மீறல்களை அங்கீகரிப்பதாகவும், வருங்கால தலைமுறையினருக்கான கல்வி செயற்பாடாகவும் அது இருந்து வர முடியும்.

- கடந்த காலத்தில் ஒருவரை இரக்கமற்ற முறையில் கொடூரமாக நடாத்தும் வெற்றிவிழா, அல்லது கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டதா?
- நாம் மாற்றத்திற்காக செயல்படுத்துகின்ற செயல்பாடுகள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி கலந்துரையாடலுக்கு எவ்வாறு உதவுகிறது?
- எவ்வாறு நாம் நினைவுகூருபவை இதற்கு உதவி செய்யும்?

[6] See http://www.slcgg.org/

# கொமாகா பிலைட், கிழக்கு திமோர்




கொமர்கா பிலைட் சிறைச்சாலை அறைகளுக்கு வெளியில் பொது மக்களால் தீட்டப்பட்ட சித்திரம்.

கிழக்கு திமோர் 1642 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் காலனித்துவ நாடாக மாற்றப்பட்டது. 1975 ஆம் ஆண்டு அது சுதந்திரம் அடைந்தது. ஒழுங்குமுறையற்ற முறையில் முன்னெடுக்கப்பட்ட காலனித்துவ கூறுகளை நீக்கும் செயன்முறை அரசியல் அதிகாரத்துக்கான போட்டிகளை எடுத்து வந்தது. இந்தோனேஷிய தலையீடு நிலைமையை மேலும் மோசமாக்கியது. 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டிமோர் - லெஸ்தே மீது இந்தோனேஷியா தாக்குதல் தொடுத்தது. உள்நாட்டுப் போர் நடைபெறாமல் இருப்பதற்காகவும், கம்யூனிஸ்ட் அதிகாரத்தை தடுப்பதற்கும் இவ்வாறு செய்ததாக இந்தோனேஷியா கூறியது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை இந்தோனேஷிய இராணுவத்தை வெளியேறும்படி கேட்டுக் கொண்டது. இந்தோனேஷிய இராணுவம் சட்டவிரோதமாக 1975 தொடக்கம் 1999 வரை நிலைகொண்டிருந்தது. இவர்களின் கொடூர அடக்குமுறை இராணுவத்திற்கு எதிராக திமோர் எதிர்த்துப் போராடும் இயக்கம் போராடியது. மோதலில் அனேக வன்முறைகள் ஏற்பட்டன. 2002 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் திமோர் - லெஸ்தே சுதந்திரம் அடைந்தது.

பல அரசியல் கட்சிகளும், சிவில் சமுக அமைப்புக்களும் உண்மையைக் கண்டறிவதும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் நிரந்தர சமாதானத்திற்கு அவசியமானது என்று 2000 ஆம் ஆண்டில் உணர்ந்து கொண்டன. ஒழுங்குவிதி 2001/10 மூலம் உருவாக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளல், உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான திமோர் - லெஸ்தே ஆணைக்குழு (CAVR) 2002 – 2005 காலப் பிரிவில் செயற்பட்டது. ஏப்ரல் 25, 1974 தொடக்கம் அக்டோபர் 25, 1999 வரையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை கண்டறிவதும், சாதாரண குற்றங்கள் தொடர்பாக சமுக ரீதியிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் அதன் பிரதான குறிக்கோளாக இருந்து வந்தது. அது தவிர, 2005 இந்தோனேஷியா மற்றும் திமோர் - லெஸ்தே நாடுகள் இணைந்து இரு தரப்பு உண்மை மற்றும் நட்புறவு ஆணைக்குழுவை (CTF) ஸ்தாபித்தன.

திமோர் ஆக்கிரமிப்பின் போது இந்தோனேஷியா இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் திமோர் - லெஸ்தே சுதந்திரத்துக்கென 1999 இல் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முழு

உண்மையையும் தெரிந்து கொள்வதற்கும், உண்மையைக் கூறி தாம் இழைத்த குற்றச் செயல்களை எற்றுக் கொண்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கும் உண்மை மற்றும் நட்புறவு ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

கொமாகா பெலைட் சிறைச்சாலை திமோர் தலைநகரான டிலியில் (Dili) அமைந்துள்ளது. இவ்விடத்தில் 1963 ஆம் ஆண்டு போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியின் போது இச்சிறைச்சாலை கட்டப்பட்டது. 1999 இந்தோனேசியா ஆக்கிரமிப்பின் போது இச்சிறைச்சாலை சித்திரவதைக் கூடமாகவும், தடுத்துவைக்கும் சிறைச்சாலையாகவும் பயன்படுத்தப்பட்டது. இச்சிறைச்சாலை கிழக்கு திமோர் மக்களுக்கு மிகவும் அச்சமூட்டும் ஓர் இடமாக இருந்தது. சுதந்திரத்தின் பின்பு 2001 ஆம் ஆண்டு இச்சிறைச்சாலை மறுசீரமைக்கப்பட்டது. இவ்விடம் தற்போது CAVR செயலக அலுவலகமாக உள்ளது. திமோர் - லெஸ்தே முன்னைய அரசியல் கைதிகள் சங்கம் இதனை பராமரிக்கிறது. இவர்களுக்கு பொருளாதார உதவி செய்பவர்கள் யப்பான் அரசாங்கமும், சிறையில் இருந்த அரசியல் கைதி ஒருவருமாவார். இந்த சிறைச்சாலை புனர்நிர்மானம் செய்யப்பட்டு, இப்பொழுது CAVR க்கு பிற்பட்ட கால அலுவலகங்களாகவும், ஏனைய மனித உரிமை அமைப்புக்களின் அலுவலகங்களாகவும் இயங்கி வருகிறது. முன்னால் அரசியல் கைதிகள் சங்கத்தின் நினைவு கருத்திட்டம், பெண்கள் வரலாறு கருத்திட்டம் மற்றும் நவம்பர் 12, 1991 கமிட்டி என்பன இந்த இடத்திலிருந்தே செயற்படுகின்றன.

2003 பெப்ரவரி 17 ஆந் திகதி ஜனாதிபதி சானா குஸ்மாவோ இதன் திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய போது, கொடூரங்கள் பல நிகழ்த்தப்பட்ட ஓர் அமைவிடத்தை, மனித உரிமைகள் மற்றும் சமாதானம் என்பவற்றை மேம்படுத்தும் ஓரிடமாக நிலைமாற்றம் செய்வதன் முக்கியத்துவத்தை குறிப்பிட்டார். "இச்சிறைச்சாலை அரசியல் கைதிகளை தடுத்துவைத்து, சித்திரவதை செய்த இடமாக இருந்து இன்று மனித உரிமையை காக்கின்ற மையமாக மாறியுள்ளது. மனவடுவில் இருந்து சமாதானமான மனநிலைக்கு மாற்றுவதே CAVR இன் நோக்கமாக உள்ளது. CAVR உண்மையை கண்டறிவதற்காக மட்டும் பணியாற்றவில்லை; பேரதிர்ச்சி நிலையிலிருந்து அமைதியான மனநிலைக்கு மக்களை மாற்றுவதனையும் அது நோக்கமாக கொண்டுள்ளது.[7] இன்று இக்கட்டடத்தை சுற்றியுள்ள பகுதியில் CAVR சுவடிக்கூடம், மனித உரிமை விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாசிகசாலை, பொதுமக்கள் ஒன்று கூடுமிடங்கள் போன்றவை அமைந்துள்ளன. இது தவிர, சிறைக்கூடங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதோடு, கைதிகளாலும், அவர்களை பாதுகாத்த அதிகாரிகளாலும் வரையப்பட்ட 65 சுவரோவியங்கள் இறந்த கால நிகழ்வுகளுக்கு சான்று பகர்கின்றன. அத்தோடு மீண்டும் வன்முறை ஏற்படகூடாது என்பதை அது உணர்த்துகிறது. இவ்வாறு கொடூரம் நிறைந்த இடத்தை மனித உரிமை காப்பகமாகவும், சுதந்திரமான இடமாகவும் மாற்றியுள்ளனர். இவ்விடம் சிறைச்சாலை கைதிகளை மட்டும் மையப்படுத்தி அமைக்கப்படாமல் இந்தோனேஷிய இராணுவ ஆட்சிக் காலத்தில் அனுதினமும் பயம், பீதி, கோபம், அவமதிப்பு என்பவற்றை அனுபவித்து வந்த கிழக்கு திமோர் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

[7] See http://www.cavr-timorleste.org/en/comarca.htm




# அத்தியாயம் 3

## நினைவுச் சின்னங்கள் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்

நினைவுச் சின்ன கருத்திட்டங்கள் அரசாங்கம், பாதிக்கப்பட்ட குழுக்கள், சமூக குழுக்கள், முன்னாள் போராளிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களினால் ஆரம்பிக்கப்படலாம். ஒரு நினைவுச் சின்ன கருத்திட்டத்தை துவக்கி வைக்கும் போது எழுகின்ற முக்கிய கேள்வி ஒன்று உள்ளது: திட்டத்தின் நோக்கம் மற்றும் இலக்கு என்ன? இது இடர்பாடுகளை எளிதாக்கி, வேற்றுமையை அகற்றி, சமரசப்படுத்த உதவுகின்றதா? அது பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட குழுக்களை அங்கீகரிக்கின்றதா? அது எதிர்கால தலைமுறையினருக்கு படிப்பினைகளை வழங்குகின்றதா? என்ற விடயங்கள் இதனோடு தொடர்புபடுகின்ற விடயங்களாக இருந்து வருதல் இத்திட்டத்தின் மூலம் சாதிக்க விரும்பும் விடயங்கள் தொடர்பான ஒரு தெளிவான குறிக்கோளை கொண்டிருத்தல் பயனுள்ளதாக இருக்கும். மோதல்களுக்கு பிந்திய பல சமூகங்களில் ஒரு சட்ட அல்லது அரசியல் அதிகாரம் மூலம் நினைவுச்சின்ன உருவாக்கச் செயன்முறை நெறிப்படுத்தலாம். உண்மை அறியும் அறிக்கைகள் நினைவுகூர்தல் முயற்சிகளை பரிந்துரைப்பது மட்டும்மல்லாமல், அத்தகைய நினைவிடங்கள் எந்தெந்த நோக்கங்களை நிறைவேற்றி வைக்கின்றன என்பது தொடர்பான பட்டியல்களையும் முன்வைக்கின்றன.

- நினைவுகூர்தல் திட்டத்தின் நோக்கம் என்ன?
- என்ன கதைகளை நீங்கள் சொல்லப் போகிறீர்கள்?
- கருத்திட்டத்தில் சம்பந்தப்பட வேண்டிய முக்கிய பங்குதாரர்கள் யார்?
- இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கக் கூடிய வளங்கள் உள்ளனவா?
- இத்திட்டத்துக்கான சரியான நேரம் இதுவா?
- இத்திட்டம் மோதலுக்கு பிந்திய நடவடிக்கைளுடன் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறது?

ஒரு உண்மையறியும் குழு, செயல்முறை அல்லது அறிக்கை இல்லாத நிலையில், நினைவுகூர்தல் முயற்சிகளை செயல்படுத்துவதற்கு மரபுரிமை அல்லது சுற்றுலா அதிகார சபை போன்ற அமைப்புக்கள் அதற்கான சட்ட வழிமுறைகளை வழங்கலாம்.

இரண்டாவது முக்கியமான பிரச்சினையாக கருதப்படுவது யாருக்காக மற்றும் என்ன தேவைக்காக இத்திட்டம் வேண்டும் என்பதாகும். மோதலுக்குப் பிற்பட்ட பல சூழ்நிலைகளில் நினைவுக்கூர்தல் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது ஒரு அரசியல் கட்டாயமாகும். இந்த அவசரம் ஒரு புதிய ஆட்சியுடன் தொடர்புடையாக அமையும். ஜனநாயக அடிப்படையில் ஒரு தேசிய அடையாளத்தை கட்டியெழுப்புவதற்கும், மனித உரிமைகளை மதிப்பதற்குமென நினைவுக்கூர்தல் திட்டங்களை அரசாங்கங்கள் பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட குழுவினரின் கதையாடல்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காத நிலையில், தேசிய நினைவுச் சின்னங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என பங்கீடுபாட்டாளர்கள் சில சந்தர்ப்பங்களில் தீர்மானிக்க முடியும். இத்தகைய நிலைமைகளில், திட்டவட்டமான ஒரு சமூகக் குழுவுக்கு அங்கீகாரமளித்து, பிரதான நீரோட்டத்துக்கு வெளியில் இருக்கும் கதையாடல்களுக்கு இடமளிப்பதற்கு அல்லது ஒரு தேசிய கதையாடலுக்கு குறை நிரப்புச் செய்வதற்கென அத்தகைய நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட முடியும்.

இந்த புதிய நினைவுக்கூர்தல் முயற்சிகள் தேசிய நினைவுக்கூர்தல் நிகழ்வுகளோடு எவ்வாறு தொடர்புபடுகின்றன? எவ்வழிகளில், அவர்கள் ஒருவருக்கொருவர் பேசுவர்? அவை யாவை மற்றும்

யாருடைய கதைகளை கூறலாம்? நினைவுகூர்தல் தன்மையை கருத்தில் கொண்டு, அடிப்படை மோதலுக்கு பிந்திய பதட்டங்களை தணிப்பதற்கு அல்லது ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க முடியுமா? இக்கருத்திட்டம் உதாரணமாக, மன்னிப்பு, சமரசம் மற்றும் நீதி தொடர்பான கடினமான கேள்விகளை கேட்டால் சமூகம் சமுதாயம் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்குமா?

முன்னர் குறிப்பிட்டது போல், நினைவுகூர்தல் என்பது பாரம்பரியமாக நிலையான நினைவிடங்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது. ஆனால், நினைவுகூர்தல் கருத்திட்டங்கள் வடிவம், அளவு மற்றும் நோக்கம் என்பவற்றில் மாறுபடும் வாய்ப்பு உண்டு. பங்குதாரர்கள் நினைவுகூரும் திட்டங்களின் அளவு, நோக்கம் மற்றும் வடிவம் என்பன தொடர்பான கேள்விகள் வளங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே இருக்கும் மனித வளம் மற்றும் நிதி வளங்கள் எவை? மோதலுக்கு பிந்திய பல சூழ்நிலைகளில் அவசர அபிவிருத்தித் தேவைகள் உள்ளன. எனினும், நினைவுகூர்தல் முயற்சிகளை செயல்படுத்துமாறு பல்வேறு பங்குதாரர்களிடம் இருந்தும் அழைப்புகள் வரலாம். இது போன்ற சூழ்நிலைகளில் நினைவுகூர்தல் முயற்சிகள் வெறுமனே அபிவிருத்தித் தேவைகளோடு போட்டியிடக் கூடாது. இந்த இரண்டும் மோதலுக்கு பிந்திய புனரமைப்பு முயற்சிகளில் பங்களிக்க முடியும். மேலும், குறைந்த வளங்கள் இருந்தால், பங்குதாரர்கள் திட்டத்தை படிப்படியாக மேற்கொள்ள முடிவு செய்யலாம். மேலும், அனைத்து நினைவுகூர்தல் திட்டங்களும் கலாச்சார மற்றும் சூழல் சார்ந்தாக இருக்கின்ற அதேவேளை, கலாச்சார, சூழல் வளங்கள் குறைந்த அளவில் தேவைப்படும் நினைவிடங்களுக்கு ஒரு தூண்டுதலை வழங்க முடியும்.

நிதி ஆதாரங்களை தவிர, இத்திட்டங்களை ஆரம்பிப்பவர்கள் திட்டத்திற்கு ஒரு வளமாக இருக்கக் கூடிய மக்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். சமூக உறுப்பினர்கள் வரலாற்றுத் தகவல்களையும், மற்றும் சான்றுகளையும் வழங்குகின்ற அதே வேளையில், மற்றைய மக்கள் திட்ட வடிவமைப்பு, நிதி திரட்டுதல், அல்லது கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் உருவாக்கம் என்பவற்றுக்கு உதவ முடியும். மோதலுக்கு பிந்தியப் பல சூழ்நிலைகளில், அவசர அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் தேவைகளுக்கு உதவுவதற்கென சர்வதேச அமைப்புகள் நிதி ஆதரவு மற்றும் மனித வளங்களை வழங்க தயாராக உள்ளன.

சர்வதேச அமைப்புக்கள் எங்களுக்கு ஒரு பெரிய உதவியாக உள்ளன. ஏனெனில், சர்வதேச அமைப்புக்கள் பெரும்பாலும் “உள்ளூர்” பிரச்சினைகளை ஒரு பரந்த கண்ணோட்டத்துடன் அவதானிக்கும். சர்வதேச அமைப்புக்கள் செயன்முறைக்கு சட்டபூர்வத்தன்மையை எடுத்து வந்து, சவால்களை அல்லது வாய்ப்புகளை சமாளிக்க விதவிதமான அணுகுமுறைகளையும் வழங்குகின்றன. இச் செயன்முறை உள்நாட்டுக்கு சொந்தமாக இருப்பதும் முக்கியம். இத் திட்டத்தில் உள்ளூர் பங்களிப்பு இருப்பதினால் உளளூர் தேவைகள் அனைத்தும் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது.

## விடுதலைப் போர் அருங்காட்சியகம், பங்களாதேஷ்




கொலைக் களங்களின் நினைவிடத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம் “இங்கு என்ன நடந்தது” என ஆறு மொழிகளில் கேட்கிறது.

பங்களாதேஷ், 1971 டிசம்பரில் ஒரு சுதந்திர அரசாக மாறியது. பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக் குழு ஜனநாயக தேர்தல் தீர்ப்பை மறுத்தமையை தொடர்ந்து ஒன்பது மாதம் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த போரின் பிறகு அது ஒரு சுதந்திர அரசாக மாறியது. மேற்கு பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் வங்காள மக்களின் தேசிய மற்றும் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்துக்கு ஒரு “இறுதித் தீர்வை” முன்வைத்தார்கள் ; அதாவது, கிழக்கு பாகிஸ்தான் மக்கள் மீது இன அழிப்புத் தாக்குதல் நடவடிக்கையை அவர்கள் கட்டவிழ்த்து விட்டார்கள். மூன்று மில்லியன் இறப்புகள், பத்து மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தமை மற்றும் 200,000 பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறை என்பனவே பங்களாதேஷ் தனது வெற்றிக்குக் கொடுத்த விலையாகும். போரினால் அழிந்த நாட்டை புனரமைப்புச் செய்ய முயன்ற போது மற்றொரு பேரழிவை அந்நாடு சந்தித்தது. ஆகஸ்ட் 1975 இல் நாட்டின் தந்தையும், குடியரசின் ஜனாதிபதியுமாகிய முஜிபுர் ரகுமான் ஓர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பினால் கொடூரமாக கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து இராணுவத்தின் சர்வாதிகார ஆட்சி அந்நாட்டில் நீண்ட காலம் தொடர்ந்து. மத அடிப்படைவாத சக்திகள் ஆளும் சிறு குழுவுடன் கைகோர்த்ததையடுத்து, அச்சக்திகளும் ஆட்சியின் ஒரு பாகமாகியது. இக்கால கட்டத்தின் போது வரலாறு மறுக்கப்பட்டதுடன், திரிக்கவும்பட்டது. பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திய மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் தாராளவாத உயர் விழுமியங்கள் துவம்சம் செய்யப்பட்டன.

இந்தப் பின்னணியில், 1996 இல் நாட்டின் 25வது ஆண்டு சுதந்திரத்தையொட்டி, எட்டு உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் சபை அருங்காட்சியகமொன்றை அமைப்பதற்கு முடிவு செய்து, கலைப்பொருட்கள். புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தி, மக்களின் போராட்டத்தை நினைவு கூர்வதற்கு அந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவிருந்தது. நகர மையத்தில் இருந்த காலனித்துவ காலத்து கட்டிடம் ஒன்றை வாடகைக்கு எடுத்து, புதுப்பிக்கப்பட்டு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. எனினும், பெரிய சவாலாக இருந்த ஒரு விடயம், சுமார் 25 வருடங்களாக பாதுகாத்து வந்த மதிப்புமிக்க நினைவுச் சின்னங்களை தானம் செய்வதற்கு மக்களை தூண்டுவது எப்படி என்பதாகும், ஏனெனில், அந்த தருணத்தில் அருங்காட்சியகம் ஒரு வாக்குறுதியாக மட்டுமாக இருந்தது. இதற்கு ஆரம்பத்தில் இருந்து சமூகத்தின் பெரும் ஆதரவு கிடைத்தது. சமூகத்தின் பங்களிப்பின் மூலம் சமூகத்திலிருந்து பெற்றுக்கொண்ட விலை மதிக்க முடியாத ஆவணங்கள் மூலம் நாட்டின் போராட்டத்தை எடுத்துக் கூற முடிந்தது.

இந்த ஆதரவினால் விடுதலைப் போர் அருங்காட்சியகம் ஒரு மக்கள் அருங்காட்சியகமாக திகழ்ந்தது. மக்களுடன் சேர்ந்து செயல்பட அதிக சாத்தியங்கள் உருவாகின. அருங்காட்சியகம் இக்கதையை ஆவணப்படுத்தப்பட்ட வகையில் முன்வைத்தது. இந்த வரலாற்று கதை 1971 டிசம்பர் 16 ஆம் திகதி வெற்றியுடன் ஓர் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. சுதந்திரத்திற்கு பிந்திய அபிவிருத்தி, நினைவுக்கூர்தல் செயன்முறை வரையறைகளுக்கு வெளியே இருந்தது. ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தை மட்டும் பிரதிபலிக்காமல், இந்த காட்சிக்கூடம் வரலாற்றில் தங்கள் சொந்த கருத்துக்களை முறைமைப்படுத்த பார்வையாளர்களுக்கு போதுமான வசதியை வழங்கியது.

அதே நேரத்தில் மதச் சார்பற்ற, ஜனநாயக கொள்கைகளை அடிப்படையாக கொண்ட விடுதலைப் போரின் அடிப்படை விழுமியங்கள் வரலாற்று நிகழ்வுகளை ஒன்றிணைக்கும் பொது இழையாக இருந்து வந்தது. இந்த அணுகுமுறை மூலம் இக்காட்சியகம் அனைத்து விதமான அரசியல் நிலைப்பாடுகளையும் கொண்டிருக்கும் மக்களை கவரக் கூடியதாக இருந்து வருவதுடன், மக்களின் நம்பிக்கையையும் வென்றெடுக்கக் கூடியதாக உள்ளது. சமூகத்தினர் முனைப்பான விதத்தில் பங்கேற்கக் கூடிய மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் இது இந்த அருங்காட்சியகத்தை தூண்டியுள்ளது.


டாக்கா புறநகர் பகுதியில் இடம்பெறும் விடுதலைப் போர் அருங்காட்சியகத்தின் ஓர் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

இந்த அருங்காட்சியகம் 2007 இல் டாக்கா புறநகர் பகுதி கொலைக் களமொன்றில் கட்டடக் கலை வடிவமைப்புடன் கூடிய நினைவிடமொன்றை நிர்மாணித்தது. கடந்த கால கொடூரங்களின் வரலாற்றுக்கு ஊடாக பயணிப்பதற்கு இது பார்வையாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கியது. இனப்படுகொலை மற்றும் அட்டூழியம் என்பவற்றின் பரவலான அனுபவங்களுடன் பங்களாதேஷ் நிகழ்வுகள் எவ்வாறு பொருந்திச் செல்கின்றன என்பது தொடர்பான ஒரு சிந்தனையையும் அது கிளரச் செய்கின்றது. முக்கோண பசுமை இடப் பரப்புக்குள் நடந்து செல்லும் போது, அந்த இடம் பார்வையாளரோடு உரையாடுகிறது. சுவரின் கறுப்பு கிரனைட் கற்களில் வரலாற்றின் மாபெரும் இனப்படுகொலைகள் சித்திரிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், கல்வெட்டுக்களையொத்த வெள்ளைக் கற்கள் 500 க்கும் மேற்பட்ட தேசிய கொலைக் களங்களை பட்டியலிடுகின்றன.

பின்னர் கைவிடப்பட்ட பம்ப் வீட்டின் அறையில் கொலைகள் நிகழ்ந்த இடத்திற்கு பார்வையாளர்கள் நுழைகின்றனர் வாசல் படியில் மனச்சாட்சிசார் நினைவிடங்களில் அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வியான ”என்ன நடந்தது இங்கே” என்ற கேள்வி ஆறு மொழிகளில்

எழுதப்பட்டுள்ளது. கலை நேர்த்தியுடன் கூடிய உள் அறை ஆழ்ந்து சிந்திப்பதற்கும், கேள்வியெழுப்புவதற்கும் பார்வையாளர்களை தூண்டுகிறது.

இந்த அமைவிடம் ஆவணப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றில் ஈடுபட்டிருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், நேரடி சாட்சியங்கள் போன்றவர்கள் இங்கு தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றார்கள். இந்த இடம் வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் ஆறுதல் மற்றும் அங்கீகாரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான ஒரு மையமாக மாற்றமடைந்துள்ளது. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சமூகத்துடனான மற்றும் பங்கீடுபாட்டாளர்களுடனான தொடர்புகளுக்கூடாக பாதிக்கப்பட்டவர்களின் குழு மற்றும் உள்ளூர் சமூகம் என்பன வலுவான பிணைப்புக்களை ஏற்படுத்தியிருப்பதுடன், இந்த நினைவிடம் தொடர்பான உரித்துணர்வும் அவர்களுக்கு மத்தியில் காணப்படுகின்றது. அந்த வகையில், இந்த நினைவிடம் பல்வேறு சமூகச் செயற்பாடுகளின் ஒரு மையமாக திகழ்ந்து வருகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் “கொலைக்களங்களின் பிள்ளைகள்” என்ற பெயரில் ஒரு இசைக்குழுவை அமைத்துள்ளார்கள். ஒவ்வொரு சனிக்கிழமை மாலை நேரத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இளம் மாணவர்களைச் சந்தித்து தமது தனிப்பட்ட அனுபவங்களை கூறுகின்றார்கள். ஒரு காலத்தில் மிகப் பயங்கரமான செயல்கள் நிகழ்ந்த அந்த இடம் இப்பொழுது ஒரு நினைவிடமாகவும், சமூகத்தின் இதயமாகவும் நிலைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சமூகத்தினால் வழங்கப்பட்டு வரும் மானிடப் பரிமாணம், நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயன்முறையில் ஒரு சமூகத்தின் அகவலிமை எவ்வாறு உந்து சக்தியாக இருந்து வர முடியும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த அருங்காட்சியகத்தில் மற்றொரு முக்கியமான ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாணவர்களை அருங்காட்சியத்திற்கு வரவழைப்பதும், மாணவர்களிடம் அதை எடுத்துச் செல்வதுமாகும். இந்த அருங்காட்சியகம், ஒரு சிறு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டிருக்கும் ஒரு நீண்ட வாகனத்தைக் கொண்டிருப்பதுடன், அது நாட்டின் தொலைதூர பிரதேசங்களிலிருக்கும் கல்வி நிலையங்களுக்கு விஜயம் செய்கின்றது. புதிய தலைமுறை உறுப்பினர்களுக்கு மத்தியில் வரலாற்றை மீண்டும் எதிர்கொள்வது தொடர்பாக உருவாக்கப்பட்டிருக்கும் ஆர்வம், இந்த உள்ளார்ந்த ஆற்றலை பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு திட்டத்தை வகுப்பதற்கு அதனை தூண்டியுள்ளது. அத்தகைய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு வாய்மொழி மூல வரலாறு கருத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. சிறு அருங்காட்சியகத்தை பார்வையிடுவதற்கும், ஒரு விவரணப்படத்தைப் பார்ப்பதற்கும், மனித உரிமைகள் தொடர்பான அகிலம் தழுவிய பிரகடனத்தை பார்வையிடுவதற்கும், அதே போல சமாதானம் மற்றும் சகிப்புத் தன்மை என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் மாணவர்கள் இங்கு அழைக்கப்படுகின்றனர். அவர்கள் 1971 இல் இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்தை நேரில் பார்த்திருக்கவில்லை. அதே வேளையில் வரலாற்றை நேருக்கு நேர் பார்த்திருக்கும் குடும்ப உறுப்பினர்களை அல்லது சமூக உறுப்பினர்களை அவர்கள் கொண்டுள்ளார்கள். இந்தப் போராட்டத்தை நேரடியாக அனுபவித்த தலைமுறையைச் சேர்ந்த ஓர் உறுப்பினரை தெரிவு செய்ய வேண்டுமென மாணவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், விடுதலைப் போர் கால கட்டத்தின் போது அவர்கள் அனுபவங்கள் குறித்து இம்மாணவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் அந்த விபரங்களை எழுத வேண்டும். முடியுமான அளவுக்கு அவை

ஆதாரபூர்வமான தகவல்களாக இருக்க வேண்டுமென்ற விடயம் வலியுறுத்தப்படுகின்றது.

இந்த செயன்முறை எளிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன், வலையமைப்பின் ஆசிரியருக்கு மாணவர்கள் தாம் எழுதிய விடயங்களை சமர்ப்பிக்கின்றனர். இந்த ஆசிரியர் நிறுவனத்தின் சார்பில் அருங்காட்சியகத்தில் தொண்டு அடிப்படையில் பணிபுரிவதற்கு முன் வருகின்றார். வலையமைப்பு ஆசிரியர்கள், மாணவர்கள் எழுதியிருக்கும் விடயங்களை சேகரித்து அருங்காட்சியத்திற்கு அனுப்புகின்றனர். அந்த விபரங்களை பெற்றுக் கொண்ட பின்னர் அருங்காட்சியகம் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்து கடிதங்களை அனுப்பி வைக்கின்றது. மேலும், அவர்கள் எழுதியிருக்கும் ஒவ்வொரு கட்டுரையும் பொருத்தமான விதத்தில் பேணி பாதுகாக்கப்படும் எனவும், நினைவுகளில் ஒரு சுவடியாக சேகரிக்கப்படும் எனவும் மாணவர்களுக்கு அருங்காட்சியகம் ஒரு வாக்குறுதியை வழங்கியுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவருக்கு அவற்றை பிற்காலத்தில் அணுகக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். மேலும் அருங்காட்சியம் மாணவர்கள் கட்டுரைகளின் ஒரு பட்டியலை நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் விவரங்களுடன் காலாண்டு அடிப்படையில் வெளியிட்டு வருகின்றது. அந்த பட்டியல் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அவை தொகுப்புக்களாக தயாரிக்கப்பட்டு, அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகம் விடுத்த ஒரு வேண்டுகோளுக்கு இளைய தலைமுறையினர் மிகச் சிறந்த விதத்தில் எதிர்வினை காட்டியுள்ளார்கள். அவர்கள் வரலாற்று பொக்கிஷங்களான தமது சேகரங்களை இந்த அழைப்பின் பிரகாரம் எடுத்து வந்தார்கள். இதுவரையில் இந்த அருங்காட்சியகம் 18,000 நேரடி சாட்சியங்களின் விபரங்களை பெற்றுக் கொண்டிருப்பதுடன், இந்த வளத்தை பல்வேறு வடிவங்களில் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றது. “நினைவுகளின் சுவடிகள்” என்ற தலைப்பிலான இந்தச் சேகரத் தொகுதி ஓர் அரிய பொக்கிஷமாக இருந்து வருகின்றது. அது முறையான ஒரு வரலாற்று ரீதியான சுவடித் தொகுப்பாக இல்லாவிட்டாலும் கூட, விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை ஆழமாகவும், நுட்பமாகவும் புரிந்து கொள்வதற்கான ஆற்றலை வழங்குகின்றது. இந்த கருத்திட்டத்தின் அளவு மற்றும் வீச்செல்லை என்பனவும், அது பல நூற்றுக்கணக்கான நேரடிச் சாட்சிகளை அணுகக் கூடியதாக இருந்து வரும் நிலையும் பெரும்பாலான சாதாரணமாக புறமொதுக்கப்படும் மக்களின் அனுபவங்களை அது வெளியில் எடுத்து வந்துள்ளன. இது தவிர, ஆட்களுக்கிடையிலான தொடர்பு மட்டத்தை பொறுத்தவரையில் இக்கருத்திட்டம் நேர்காணல் நடத்துபவருக்கும், நேர்காணல் நடத்தப்படுபவருக்குமிடையிலான ஒரு அற்புதமான கணத்தை உருவாக்குகின்றது. இந்த செயல்முறை இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த இரு நபர்கள் மிகவும் நெருக்கமாக விதத்தில் தம்மை பிணைத்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. ஒரு கல்வி அனுபவம் என்ற முறையில், அது மாணவர்கள் பாடப்புத்தகங்களில் எழுதியிருக்கும் வரலாற்றை மட்டுமன்றி ஏனைய வரலாறுகளைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றது. அது மட்டுமல்லாமல் வரலாறு எப்பொழுதும் உயிரோட்டமானது விடயத்தையும் அவர்கள் புரிந்து கொள்கின்றார்கள். இந்தக் கண்டுபிடிப்பை மேற்கொள்வதற்காக ஒவ்வொருவரும் தமது சொந்த வரலாற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

இந்த அருங்காட்சியகம் புதிய தலைமுறையினரிடம் வரலாற்றை எடுத்துச் சென்றிருப்பதுடன்,

இளைஞர் சமுதாயத்தினர் அருங்காட்சியகத்தின் சேகரங்களுக்கு தமது பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள். கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்வதற்கான ஆர்வத்தை அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இந்தக் கூட்டு முயற்சி நினைவுச் சின்னங்களை உருவாக்கும் செயன்முறையில் புதிய எல்லைகளை விஸ்தரித்துள்ளது - இது ஒவ்வொரு அருங்காட்சியகமும் ஆக்கபூர்வமான வழியில் எதிர்கொள்ளவிருக்கும் ஒரு சவாலாக இருந்து வருகின்றது.




# அத்தியாயம் 4

## கலந்தாலோசனை செய்தல்

நினைவுச் சின்ன கருத்திட்டங்களின் வெற்றி உண்மையான கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் பொழுது மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளிலேயே தங்கியுள்ளது. யார் இந்த செயன்முறையில் சேர்க்கப்பட வேண்டும், எப்படிச் சேர்க்கப்பட வேண்டும், செயன்முறையின் எந்தக் கட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் போன்ற கேள்விகள் பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கிய கேள்விகளாகும். நினைவுச்சின்ன கருத்திட்டங்களை முன்னெடுப்பவர்கள் முதலாவது செய்ய வேண்டிய காரியங்களில் ஒன்று கலந்தாலோசனை நடத்துவதாகும். இந்த கலந்தாலோசனை செயன்முறையில் பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்த பங்குதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட கருத்திட்டத்தின் சாத்தியப்பாட்டை மதிப்பிடுதல், (ஒரு கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தால்) அக்கருத்திட்டம் குறித்து பங்குதாரர்களுக்கு தகவல்களை வழங்குதல், அது தொடர்பான பங்குதாரர்களின் தேவைகளை புரிந்து கொள்ளல், கருத்திட்டம் குறித்த பரவலான உரித்துணர்வையும், அங்கீகாரத்தையும் ஏற்படுத்தல் என்பன இதன் குறிக்கோளாக இருந்து வருகின்றது. கருத்திட்டத்தின் துவக்க கட்டங்களிலேயே பொதுவாக கலந்தாலோசனைகளை நடத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது. ஆனால், தகவல் பகிர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு கருத்திட்டத்தின் அனைத்துக் கட்டங்களிலும் கலந்தாலோசனைகள் இடம் பெறுதல் வேண்டும்.

- கலந்தாலோசனை நடத்தும் செயன்முறையொன்றின் அளவு மற்றும் வீச்செல்லை என்பவை என்ன?
- பங்கீடுபாட்டாளர்களுக்கு வழங்கப்படும் தெரிவுகளின் அளவுகோல்கள் எவை?
- நீங்கள் எதிர்பார்ப்புக்களை எவ்வாறு சமாளிக்கப் போகின்றீர்கள்?
- கலந்தாலோசனையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பிரதான பங்கீடுபாட்டாளர்கள் யார்?
- எந்த பங்கீடுபாட்டாளர்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டும்?

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கருத்திட்டம் குறித்து பங்கீடுபாட்டாளர்களுக்கு தெரிவிப்பதற்காக மட்டுமே கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், யதார்த்தத்தில் இந்த கலந்தாலோசனை செய்யப்படும் செயன்முறை தகவல்களை தெரிவிக்கும் ஒரு செயன்முறையாகவும் அதே போல பங்கீடுபாட்டாளர்களின் தேவைகள் குறித்த தகவல்களை கேட்டுப் பெறும் ஒரு செயன்முறையாகவும் இருந்து வர வேண்டும். மேலும், இக் கலந்தாலோசனைகளின் போது கருத்திட்டத்தின் தேவைகள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களின் தேவைகள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பவற்றை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, கருத்திட்டங்களை முன்னெடுப்பவர்கள் கலந்தாலோசனை செயன்முறைக்கூடாக கருத்திட்டத்திற்கான சட்டகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து மேலதிக உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அந்தச் சட்டகத்தை அவர்களிடம் பகிர்ந்து கொள்வது அவசியமாகும் அந்த நிலையில், குறிப்பிட்ட கருத்திட்டம் குறித்து பங்கீடுபாட்டாளர்கள் தகவல்களை அறிந்து தெரிவுகளை மேற்கொள்ள முடியும். அதே வேளையில், கருத்திட்டத்தை ஆரம்பிப்பவர்கள்

கருத்திட்டம் தொடர்பான எதிர்ப்பார்ப்புக்களையும் சமாளிக்கக் கூடியவர்களாக இருந்து வர வேண்டும்.

மோதலுக்கு பிற்பட்ட சமூகங்களில், குறிப்பாக அடக்குமுறை மற்றும் மௌனிக்கச் செய்தல் என்பவற்றின் வரலாற்றை கொண்டிருக்கும் சமூகங்களில் இவ்விதம் நடத்தப்படும் கலந்தாராய்வு செயன்முறைகள் பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்த பங்கீடுபாட்டாளர்கள் மத்தியில் தமது கருத்துக்களும், அபிப்பிராயங்களும் முக்கியமாக இருந்து வருகின்றன என்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகின்றன. தமது குரல்கள் செவிமடுக்கப்படுகின்றன என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகின்றது. அது உரையாடல் மற்றும் கலந்துரையாடல் என்பதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பும் செயன்முறைக்கும், ஒரு சமூக உணர்வுக்கும் பங்களிப்புச் செய்கின்றது. ஏனெனில், அது தாம் ஒரு பொதுக் குறிக்கோளை நோக்கி செயற்பட்டு வருகின்றோம் என்ற உணர்வை பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியில் ஏற்படுத்துகின்றது. மேலும், கருத்திட்டம் தொடர்பாக அனைவரும் பரவலாக உரித்துக் கொண்டாடும் ஒரு நிலையையும் அது ஊக்குவிக்கின்றது. இந்த உரித்துணர்வு கருத்திட்டத்தின் நீண்ட கால நிலைக்கும் தன்மை மற்றும் தொடர்ச்சியான சமூகப் பங்கேற்பு என்பவற்றுக்கு அவசியமாகும்.

கலந்தாலோசனை செய்யும் ஒரு செயன்முறையை மேற்கொள்வதற்கு முன்னர் கருத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பவர்கள் பங்கீடுபாட்டாளர்கள் பட்டியலொன்றை தயாரித்தல் வேண்டும். கலந்தாலோசனையில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான பங்கீடுபாட்டாளர்கள் யார்? உதாரணமாக, ஒரு சமூக நினைவிட கருத்திட்டத்தில் சமூக உறுப்பினர்கள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள், உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் அயலிலுள்ள பாடசாலைகளை சேர்ந்தவர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டுப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

ஒரு தேசிய கருத்திட்டதை பொறுத்தவரையில், குறிப்பாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நினைவுச் சின்ன திட்டங்களை பொறுத்தவரையில், கலந்துரையாடல் ஒரு பரந்த நோக்கத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கலந்தாலோசனை செயன்முறைகள் தேசிய நல்லிணக்கத்திற்கும், மீள் கட்டுமான செயன்முறைகளுக்கும் பங்களிப்புச் செய்வது அவசியமாகும். தீவிரமான தொடர்ச்சியான கலந்தாலோசனை செயன்முறையொன்றுக்கான அர்ப்பணிப்புணர்வு, புதிய அரசாங்கம் ஜனநாயக செயன்முறைகளுக்கு மதிப்பளிக்கின்றது என்ற செய்தியையும், அனைத்துப் பிரஜைகளினதும் குரல்களுக்கு செவிமடுக்கின்றது என்ற செய்தியையும் மக்களுக்கு வழங்குகின்றது. தேசிய கருத்திட்டங்களின் அளவின் பின்னணியில் நோக்கும் பொழுது, கலந்தாலோசனை நடத்தும் செயன்முறைகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற முடியும். குறிப்பிட்ட ஒரு மாநிலத்தில் அல்லது மாவட்டத்தில் விரிவான அனைவரையும் உள்ளடக்கும் கலந்தாலோசனை செயன்முறைகளை மேற்கொள்ள முடியும். அதே வேளையில், மாவட்ட மட்டத்தில் நகரக் கூட்டங்கள் அல்லது பாரிய கிராமக் கூட்டங்களுக்கூடாக வரையறுக்கப்பட்ட கலந்தாலோசனை செயன்முறைகளை மேற்கொள்ள முடியும்.

இது தவிர, பாரிய கருத்திட்டம் தொடர்பாக தேசிய உரித்துணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கருத்திட்டத்தை துவக்கி வைத்தவர்கள் இந்த இடத்துடன் சம்பந்தப்பட்ட ஆக்கபூர்வமான கருத்திட்டங்களுடன் இணைந்த விதத்தில் முழு நாட்டையும் அதில் சம்பந்தப்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கலாம். சியாரா லியோன் நீதிமன்றத்தை பொறுத்தவரையில் கருத்திட்ட

முகாமைத்துவ அணியினர் நினைவுத் தோட்டங்களை வடிவமைப்பதற்கென தேசிய வடிவமைப்புப் போட்டியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்தப் போட்டி இந்த நினைவிடத்தின் எண்ணக் கரு ரீதியான வடிவமைப்பில் பங்கேற்பதற்கு அனைத்து சியாரா லியோன் மக்களுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியது. தேசிய மற்றும் சர்வதேச சித்திரக் கலைஞர்களிடமிருந்து 28 ஆக்கங்கள் கிடைத்ததுடன், அவற்றில் வெற்றியீட்டிய 04 ஆக்கங்கள் இறுதி வடிவமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கென தெரிவு செய்யப்பட்டன. தென் ஆபிரிக்காவின் Constitution Hill நினைவிட கருத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் முதலில் "மக்களாகிய நாம்" என்றொரு திட்டத்தை முன்னெடுத்தார்கள். இந்த திட்டம் இரண்டு நடவடிக்கைகளை கொண்டிருந்தது – மக்களை நினைவிடத்திற்கு எடுத்து வருதல் மற்றும் நினைவிடத்தை மக்களிடம் எடுத்துச் செல்லல் என்பனவை அந்தச் செயற்பாடுகளாகும். நினைவிடத்தை மக்களிடம் எடுத்துச் செல்லல் செயற்பாட்டின் கீழ் மரபுரிமை, கல்வி மற்றும் சுற்றுலாத் துறை அணியினர் அயல் சமூகங்களைச் சேர்ந்த மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கான கலந்தாலோசனை செயற்பாடொன்றை முன்னெடுத்தார்கள். இந்த இடம் தொடர்பான அவர்களது நினைவுகள் மற்றும் இந்த இடம் எவ்வாறு அபிவிருத்திச் செய்யப்பட வேண்டுமென்பது தொடர்பான அவர்களுடைய யோசனைகள் என்பவற்றை பெற்றுக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இங்கு அமையவிருக்கும் நினைவிடம் உள்ளூர் சமூகங்களின் தேவைகளுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பன தொடர்பான கருத்துக்களும் மக்களிடம் கேட்கப்பட்டன. நினைவிடத்திற்கு மக்களை எடுத்து வருதல் செயற்பாட்டின் கீழ் இந்த அணியினர் நாடெங்கிலும் பிரயாணங்களை மேற்கொண்டு தென் ஆபிரிக்காவின் புதிய அரசியலமைப்பு தொடர்பாக பன்முகப்பட்ட மக்களிடமிருந்து கருத்துக்களை கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். "மக்களாகிய நாம்" திட்டத்தின் மூலம் கிடைத்த கருத்துக்கள் இந்த அமைவிடத்தில் ஒரு கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன. மேலும், இந்த அணி நாடெங்கிலும் இயங்கி வந்த பெண்கள் அமைப்புக்களுக்கூடாக பாரம்பரிய பின்னல் வேலை கருத்திட்டமொன்றையும் முன்னெடுத்தது. குறிப்பாக, கிராமச் சமூகங்களுக்கு மத்தியில் இந்தக் கருத்திட்டம் தொடர்பாகவும் அதே போல அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் உரிமைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வைத் தூண்டுவதே இதன் நோக்கமாக இருந்து வந்தது.

## Constitution Hill தென் ஆபிரிக்கா

1960 கள் முதல் தென் ஆபிரிக்கா அதன் மிக மோசமான இன வெறி மற்றும் வெள்ளையருக்கு சிறப்புரிமை என்ற இனப் பாகுபாட்டுக் கொள்கைகளினால் சர்வதேச சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதாகவே இருந்தது. பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வை அடுத்து, தென் ஆபிரிக்க நாட்டின் முதல் கறுப்பர் ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா 1994 ஆம் ஆண்டு பதவி ஏற்றதுடன், அது ஒரு ஜனநாயக நாடக மாற்றமடைந்தது. தென் ஆபிரிக்கா அதன் கடந்த காலத்தை கருத்தில் கொண்டு, நியாயமான. சமத்துவமான சமூகமொன்றை கட்யெழுப்பும் பொருட்டு பல்வேறு சீர்த்திருத்தங்களை முன்னெடுத்தது. 1995 இல் தென் ஆபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த கால நிகழ்வுகள் குறித்த வரலாற்றை துல்லியமாக பதிவு செய்வதும், பிளவுபட்டுக் கிடந்த தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதுமே இந்த ஆணைக்குழுவின் நோக்கமாக இருந்து வந்தது. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பன தொடர்பான புதிய ஆட்சியாளர்களின் அர்ப்பணிப்யையும், இனப் பாகுபாடு இல்லாதொழிக்கப்பட்டமையையும் 1996 இல்

மீள எழுதப்பட்ட தென் ஆபிரிக்க அரசியலமைப்பு பிரதிபலிக்கின்றது.

1995ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்க அரசியலமைப்பு நீதிமன்றதிற்கு முதல் நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர் ; நாட்டின் புதிய அரசியலமைப்பை மேம்படுத்தவும், நிலைநாட்டவும் அந்த நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்துக்கு ஒரு புதிய இடத்தைத் தெரிவு செய்வதும், புதிய அரசியலமைப்பின் விழுமியங்களை பிரதிபலிக்கும் விதத்திலும், நீதி குறித்த நிறப் பாகுபாடுசார் வரைவிலக்கணங்களை முழுமையாக நிராகரிப்பதனை குறியீடாகக் காட்டும் விதத்திலும் அந்த இடத்தில் ஒரு கட்டடத்தை நிர்மாணிப்பதும் நீதிபதிகளின் முதலாவது பொறுப்புக்களில் ஒன்றாக இருந்து வந்தது. தென் ஆபிரிக்காவின் இன வெறி வரலாற்றில் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஓரிடத்தை அவர்கள் அதற்கென தெரிவு செய்தார்கள். அந்த இடம் தான் இலக்கம் நான்கு, பழைய கோட்டை சிறைச்சாலை.

நம்பர் நான்கு என்ற பெயரில் பிரபல்யமடைந்திருக்கும் பழைய கோட்டையில் அமைந்திருக்கும் சிறைச்சாலை தென் ஆபிரிக்க குடியரசின் முதலாவது ஜனாதிபதியால் வந்தேறு குடிகளான சுரங்கத் தொழிலாளர்களை மிரட்டும் ஓரிடமாக ஜொஹன்னஸ்பேர்க் நகரின் மையத்தில் அமைக்கப்பட்டது. நீண்ட காலமாக அது ஒரு இராணுவக் கோட்டையாகவும், தண்டனை வழங்கும் இடமாகவும், தடுத்து வைத்து துஷ்பிரயோகம் செய்யும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நிற வெறி நிலவி வந்த ஆட்சிக் காலத்தின் போது, நெல்சன் மண்டேலா மற்றும் மகாத்மா காந்தி போன்ற அரசியல் கைதிகளை அடைத்து வைத்திருந்த இடமாகவும் அது இருந்து வந்தது. இந்தத் தலைவர்கள் சாதாரண குற்றச் செயல்களை புரிந்த நபர்களுடன் சேர்த்து இந்த சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், இங்கு அடைக்கப்பட்டிருந்த பெரும்பாலான கைதிகள் தமது அடையாள அட்டையை எடுத்துச் செல்லாதிருத்தல் போன்ற மிகச் சிறிய இன வெறி ஆட்சிச் சட்டங்களை மீறிய காரணத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான சாதாரண பிரஜைகளாகவே இருந்த வந்தார்கள். தென் ஆபிரிக்காவின் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் புதிய இல்லமாக இந்தச் சிறைச்சாலையை தெரிவு செய்து கொண்டமைக்கான காரணம் அதன் வரலாறே ஆகும். நீதிபதிகள் என்ற முறையில் அவர்கள் இன்று கடந்த கால அநீதிகளின் நினைவுகளை கொண்டிருக்கும் ஒரு இடத்திலிருந்து நீதி தொடர்பான தமது முடிவுகளை எடுக்கவுள்ளார்கள்: புதிய தென் ஆபிரிக்காவின் புதிய தொலைநோக்கினை கொண்டிருப்பவர்கள் என்ற முறையில் அபகீர்த்தி வாய்ந்த இந்த Number 4 சிறைச்சாலையை ஒரு ஜனநாயக மையமாக நிலைமாற்றம் செய்வதென்பது மிகவும் வலிமையான ஒரு குறியீடாகவுள்ளது. ஆனால், ஒரு எதிர்மறை விடயத்தை ஒரு சாதகமான விடயமாக மாற்றிக் கொள்வது எப்படி? மிக முக்கியமாக நாட்டின் ஆக உச்ச நீதிமன்றத்திற்கூடாக வழங்கப்படும் நீதி அனைத்து தென் ஆபிரிக்க மக்களின் வாழ்க்கையை பொறுத்தவரையிலும் எவ்வாறு ஒரு யதார்த்தமாக இருக்க முடியும்? Constitution Hill (அரசியலமைப்பு மலை) என்ற இந்த இடம் ஒரு பாரிய பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கென தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஜொஹனஸ்பேர்க் நகரின் மிக மோசமாக வறுமை நிலவும் புறநகர் பகுதியொன்றான இப்பகுதியை புத்துயிரூட்டுவதற்கென இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. ஆனால், இங்கு சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களின் அனுபவங்களை சான்றாக முன்வைக்க வேண்டிய தேவையும் இருந்து வந்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள் மிக மோசமான மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருந்தார்கள். மனித

உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் என்பன தொடர்பாக இன்றைய சூழலில் சிந்திப்பதற்கும், பகிரங்கமாக கலந்துரையாடுவதற்குமான ஒரு வெளியை வழங்குவதும் இதன் மற்றொரு நோக்கமாக இருந்து வந்தது. இத்தகைய பல தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு அமைவிட அபிவிருத்திக் குழு பலநோக்கு திட்டமொன்றை உருவாக்கியதுடன், மரபுச் சின்னம், சுற்றுலாத் துறை மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பாக கவனம் செலுத்தியது.

சிறைக்கூடம் அமைந்திருந்த இடத்தில் புதிய அரசியலமைப்பு நீதிமன்றத்தை உருவாக்கும் குறிக்கோளை சாதித்துக் கொள்ளும் பொருட்டு பொதுவாக அரச வேலைத் திணைக்களத்தினால் அரசாங்க கட்டடங்கள் வடிவமைக்கப்படும் வழமையான பாரம்பரியத்திற்கு பதிலாக ஒரு புதிய அணுகுமுறையை பின்பற்ற வேண்டுமென நீதிபதிகள் கருதினார்கள். இதற்கென பகிரங்க சர்வதேச வடிவமைப்பு மற்றும் கட்டடக் கலை போட்டியொன்றை நடத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இந்தப் போட்டி கடந்த காலத்திலிருந்து மீண்டு வருவதற்கு உதவுவதுடன், புதிய ஜனநாயக அணுகுமுறைக்கான ஒரு குறியீடாகவும் இருந்து வருமென அந்த நீதிபதிகள் எண்ணினார்கள்.



அதன் *"lekgotla"*[10] நிகழ்ச்சித்திட்டத்திற்கூடாக நினைவிடம்

இந்த நீதிபதிகள் பொது வேலைகள் திணைக்களத்துடன் இணைந்து இரண்டு கட்டங்களிலான ஒரு சர்வதேச போட்டியை நடத்தினார்கள். பல்வேறு பங்கீடுபாட்டாளர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பன்முகக் குழுவை இந்தப் போட்டிக்கான நடுவர்களாக நியமனம் செய்தார்கள். இந்தப் போட்டி அனைவரும் பங்குபற்றக் கூடிய விதத்தில் சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட போதிலும், இறுதியில் வெற்றியீட்டிய வடிவமைப்பு "எமது நாட்டில் இடம்பெற்று வரும் நிகழ்வுகளை அரவணைத்துக் கொண்டிருக்கும்" நபர்கள் என தம்மைக் கூறிக் கொள்ளும் இளம் தென் ஆபிரிக்க குழுவிலிருந்திருந்தே வந்தது.[8] இறுதி வடிவமைப்பு தொடர்பாக பெருமளவுக்கு இடம்பெற்ற விவாதம் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றையடுத்து, வடிவமைப்புக் குழு, அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளுடனும், வடிவமைப்பு கமிட்டியுடனும் கலந்தாலோசனை செய்து இறுதி வடிவமைப்பை தெரிவு செய்தது. எவ்வாறிருப்பினும், இந்த வடிவமைப்பை ஒரு யதார்த்தமாக மாற்றிக் கொள்ளும் விடயத்தில் இந்த அணி பல்வேறு வகையிலான சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. ஏனெனில், இந்த வடிவமைப்பில் Constitution Hill என்ற இடத்திற்குச் செல்லும் பாதைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிட வேண்டியிருந்ததுடன், பழைய சிறைக்கூடத்தை புதிய நீதிமன்றத்துடன் ஒருங்கிணைக்க வேண்டிய தேவையும் இருந்தது. இறுதியில் அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையிலான நிதிப்படுத்தலுக்கூடாக இக் கருத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

[8] Lauren Segal et al. (2006) *Number Four: The Making of Constitution Hill*. London: Penguin, pg. 85.

அதன் பின்னர் Constitution Hill என்ற இந்த இடம் ஒரு பலநோக்கு கட்டடத் தொகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. Number 4 சிறைச்சாலையில் ஒரு பாகம் ஒரு அருங்காட்சியமாக பேணப்பட்டிருப்பதுடன், புதிய அரசியலமைப்பு நீதிமன்றம் பக்கசார்பற்ற விதத்தில் நீதி வழங்கும் ஒரு இடமாக இருந்து வருகின்றது. அதே போல இன வெறி ஆட்சி நிலவிய காலத்தில் நிலவி வந்த பல்வேறு சமூக பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் பல நிறுவனங்களின் அலுவலகங்களும் இந்த இடத்தில் செயற்பட்டு வருகின்றன. அதன் 'lekgotla”[9] நிகழ்ச்சித்திட்டத்திற்கூடாக, இந்நினைவிடம் நீதி மற்றும் சுதந்திரம் போன்ற விடயங்கள் தொடர்பான உரையாடல்கள், அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் பரிசீலனை செய்யப்பட்டு வரும் ஒரு பால் திருமணங்கள் மற்றும் காணியுரிமைகள் போன்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் பரவலான விவாதங்களை ஊக்குவித்து வருகின்றது. இன்று இந்த நினைவிடம் அதன் பரவலான கலந்தாலேசனை நிகழ்ச்சித்திட்டத்திற்கூடாக (மேலே குறிப்பிடப்பட்டதை போல) புதிய தென் ஆபிரிக்காவின் ஒரு தேசிய குறியீடாக இருந்து வருவதுடன், புதிய தென் ஆபிரிக்காவை வரையறை செய்து கொள்வதற்காக தென் ஆபிரிக்கர்களும் ஏனையவர்களும் விவாதம் செய்யக் கூடிய ஒரு தேசிய பொது இடமாகவும் இருந்து வருகின்றது.

[9] “*Lekgotla*” is a Tswana word referring to a pre-colonial form of democratic deliberation, in which villagers gather under a shady tree to address issues they are facing.




# அட்டவணை 5

## நினைவுச் சின்னங்கள் இல்லாத நினைவேந்தல் நிகழ்வுகள்

நினைவுச் சின்னங்கள் என்பவை கற்கள், பாறை அல்லது பளிங்கு என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்ற விடயம் இந்த கைநூல் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது, மோதலுக்குப் பிற்பட்ட குறிக்கோள்களாக இருந்து வரும் நல்லிணக்கம், அங்கீகாரம், உண்மையைக் கண்டறிதல், பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் வருங்கால தலைமுறையினருக்குக் கல்வியூட்டல் ஆகிய குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு கற்களினால் நினைவுச்சின்னங்களை அமைப்பதற்கான தேவை இருந்து வரவில்லை. இரண்டாவது உலகப் போரை நினைவுகூரும் நினைவுச் சின்னங்களின் வகையைச் சேர்ந்த நினைவுச் சின்னங்களிலிருந்து விலகிச் செல்லும் அதிகரித்தளவிலான போக்கு இப்பொழுது காணப்படுகின்றது. இப்பொழுது எண்ணக்கரு கலை அதாவது, உயிர்த்துடிப்பான வெளிகளை உருவாக்குவதற்கென கலையை பயன்படுத்தும் விதத்திலேயே நினைவிடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அது தவிர, முன்னர் குறிப்பிட்டப்பட்டதை போல, பல்வேறு செலவு குறைந்த வழிமுறைகளிலும் நினைவிடங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். அவை பொதுமக்களுக்கிடையில் தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் உயிர்த்துடிப்பான நினைவிடங்களாக இருந்து வருவதனை உறுதிப்படுத்த முடியும். அவற்றில் பொதுமக்கள் முனைப்பான விதத்தில் பங்கேற்பதுடன், சமூகத்தில் மாறிவரும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கென தொடர்ச்சியாக தம்மை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய நிலையிலும் அவை இருந்து வரும்.

## கிரிமல்டி சமாதான பூங்கா, சிலி.



இந்த இடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்களின் நினைவுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் ரோஜாப்பூ தோட்டம்

1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சிலியில் இடம்பெற்ற ஒரு இராணுவப் புரட்சி ஜனாதிபதி சல்வடோர் அலெண்டேவின் அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டு வந்து, வலதுசாரி இராணுவ ஆட்சியொன்றை சிலியில் ஸ்தாபித்தது. நாடெங்கிலும் இருந்து வந்த ஜனநாயக நிறுவனங்கள் மூடப்பட்டதுடன், அவற்றுக்குப் பதிலாக மிகவும் கொடூரமான இராணுவ சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டது. ஒரு அடக்குமுறை செயற்பாடு துவக்கி வைக்கப்பட்டதுடன், அரசின் எதிரிகள் முறையான ஒழுங்கில் ஒழித்துக்கட்டப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான பிரஜைகள் தடுத்து வைக்கப்பட்டதுடன், “காணாமல் போனார்கள்”. ஏனையவர்கள் தடுப்பு முகாம்களிலும், சித்திரவதை முகாம்களிலும் 17 வருட அரச பயங்கரவாத கால கட்டத்தின் போது துன்பங்களை அனுபவித்தார்கள். அத்தகைய இடங்களில் ஒன்று கிரிமால்டி தோட்டமாகும். சன்டியாகோ புறநகர் பகுதியில் செல்வந்த குடும்பமொன்றுக்குச் சொந்தமான இடமே கரிமால்டி தோட்டமாகும். அது உயர்ந்த கற் சுவர்களினால் மூடுண்டு இருந்ததுடன், பல்வேறு அளவுகளைக் கொண்ட பல்வேறு கட்டடங்களை கொண்டிருந்தது.

இந்தத் தோட்டத்தின் பிரித்து வேறாக்கிக் கொள்வதற்கும், தனிமைப்படுத்துவதற்கும் பொருத்தமான இடமாக இருந்து வந்தது. 1973 ஆம் ஆண்டு சதிப் புரட்சியை அடுத்து தேசிய புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் இந்தத் தோட்டத்தை மையப்படுத்தி, இராணுவ சர்வதிகார ஆட்சிக் காலத்தின் போது இரகசிய தடுப்பு முகாமாகவும், வன்முறை நிகழ்த்தப்படும் ஒரு மையமாகவும் அதனை பயன்படுத்திக் கொண்டார்கள். வருங்கால ஜனாதிபதி மைக்கல் பெச்லட் மற்றும் அவருடைய தாய் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் ஆட்சிக்கு எதிராக இருந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட 4500 க்கும் மேற்பட்ட ஆட்கள் தமது வீடுகளிலிருந்து அல்லது வீதிகளிலிருந்து கடத்தப்பட்டு, கண்கள் மூடப்பட்ட நிலையில் இந்த இடத்திற்கு எடுத்து வரப்பட்டார்கள் ; அவர்களுக்கோ, அவர்களது குடும்பத்தினருக்கோ அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்ற விடயம் தெரியவில்லை. அங்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு, அவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள் ; நான்கு பேர் கொல்லப்பட்டதுடன், 226 பேர் காணாமல் போனார்கள்.

கிரிமால்டி சிறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் ஒரு குழு 1996 ஆம் ஆண்டில் இந்த இடம் தொடர்பான நினைவுகளை பேணிப் பாதுகாப்பதற்கும், இங்கே நிகழ்வுகளின் படிப்பினைகளை நிலையான மனித உரிமை கலாசாரமொன்றை மேம்படுத்துவதற்கு பயன்படுத்திக் கொள்வதற்குமென இந்த சமாதான பூங்காவை இங்கு அமைத்தார்கள். தப்பிப் பிழைத்தவர்களின் சங்கம் இது தொடர்பாக எதிர்கொண்ட முதலாவது சவால்களில் ஒன்று, இந்த அமைவிடம் முன்னர் இருந்த அதே விதத்தில் இப்போது இல்லாமல் இருந்தமையாகும். இராணுவ சர்வாதிகார ஆட்சியின் முடிவு நெருங்கி வந்த பொழுது, புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் கிரிமால்டி தோட்டத்தை எரித்து தரைமட்டமாக்கினார்கள். அது பயன்படுத்தப்பட்ட கொடிய நோக்கங்கள் தொடர்பான சான்றுகளை அழிப்பதே இதனுடைய நோக்கமாக இருந்து வந்தது. ஒரேயொரு கட்டடம் மட்டுமே எஞ்சியிருந்தது. புலனாய்வு பிரிவு அதன் முகவர்களுக்கென போலியாக அடையாள அட்டைகளை தயார் செய்த சிறு வெளிக்கட்டடம் ஒன்று மட்டுமே அவ்வாறு எஞ்சியிருந்தது. கைவிடப்பட்ட இந்த இடிபாடுகள் இந்த இடத்தில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டவர்களின் அனுபவங்களுக்கு எவ்வாறு சான்று பகர முடியும்? கடும் மன அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த அமைவிடம், தப்பிப் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்கள் ஆகியோருக்கு சமாதானம் மற்றும் மனஆறுதல் அளித்தல் என்பவற்றை கொடுக்கும் ஒரு வெளியாக இருந்து வர முடியுமா?

இந்தத் தோட்டத்தை முன்னர் இருந்த அதே விதத்தில் திருத்தி பழுதுபார்க்க முடியுமா அல்லது மீள உருவாக்க முடியுமா என்ற விடயம் குறித்து தொடக்கத்தில் இக்குழுவுக்கு மத்தியில் பல கேள்விகளும், விவாதங்களும் இடம்பெற்றன. இறுதியில், அதனை அதே விதத்தில் மீள உருவாக்குவதற்குப் பதிலாக, அந்த இடத்தை ஒரு சமாதான பூங்காவாக மாற்றியமைப்பது என முடிவு செய்யப்பட்டது. அந்தப் பூங்காவில் குறியீட்டு ரீதியான

நினைவுச் சின்னங்களையும், கட்டமைப்புக்களையும் ஆங்காங்கே வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. அடுத்து வந்த காலப் பிரிவின் போது, ஒவ்வொரு கட்டமைப்பும் எதனை குறியீடாக காட்ட வேண்டும் என்ற விடயம் குறித்து ஆழமான கலந்துரையாடல்களும், விவாதங்களும் பெருமளவுக்கு இடம்பெற்றன. பல்வேறு பாணிகளைக் கொண்ட வெவ்வேறு விதமான நினைவுச் சின்னங்கள் அந்த இடத்தில் ஒவ்வொரு காலப் பிரிவின் போதும் இவ்விதம் உருவாக்கப்பட்டன. அவற்றின் பெரும்பாலானவற்றின் நோக்கம் பாதிக்கப்பட்ட நபர்களின் அனுபங்களை கூறுவதிலும் பார்க்க, அவற்றை எடுத்துக் காட்டுவதன் மூலம் பார்வையாளர்களுக்கு மத்தியில் ஓர் உணர்வை ஏற்படுத்துவதாகும். உதாரணமாக, அந்த இடத்தில் இருந்த நடைபாதைகளின் வண்மையமான சித்திர வேலைப்பாடுகள், அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் அனுபவங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் பூங்காவின் தரையெங்கும் ஆங்காங்கே சிதறலாக பொறிக்கப்பட்டன. ஏனெனில், அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் கண்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கட்டப்பட்டிருந்ததுடன், அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சென்ற பொழுது, தரையின் பளபளப்புக்களை மட்டுமே அவர்களால் பார்க்க முடிந்தது. இத்தகயை சித்திர வேலைப்பாடுகளில் ஒரு சில வண்ணமயமான நினைவுச் சின்னங்களாக தரையில் பதிக்கப்பட்டிருப்பதுடன், முன்னர் இந்த இடத்தில் அமைந்திருந்த கட்டமைப்புக்கள் எதற்காக பயன்படுத்தப்பட்டன என்பதனை அடையாளம் காணும் விதத்தில் அவை அவ்விதம் அமைக்கப்பட்டன. (உதாரணமாக “சித்திரவதை அறை”) தப்பிப் பிழைத்தவர்களுக்கு இந்த அமைவிடத்தின் அபிவிருத்தியில் பகங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கும் அதே வேளையில், பாதிக்கப்பட்டவர்களை கௌரவப்படுத்துவது தொடர்பான மற்றொரு உதாரணம் பெண் சிறைக் கைதிகளை நினைவுகூரும் விதத்தில் ரோஜாப்பூத் தோட்டமொன்றை நிறுவதற்கான தீர்மானமாகும். சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெண்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விசாரணை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொழுதும், திரும்பி வந்த பொழுதும் அவர்கள் ரோஜாப்பூவின் நறுமணத்தை நுகர்ந்ததனை நினைவுகூரும் விதத்தில் இந்த ரோஜாத் தோட்டம் அமைக்கப்பட்டது. இந்தப் பழைய குறியீட்டுக்கு ஒரு புதிய பொருள் வழங்கப்பட்டது: பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு அங்கு வந்து ஒரு ரோஜாச் செடியை நடுமாறும், ஒவ்வொரு ரோஜா செடியையும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்மணி தொடர்பாக அர்ப்பணிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இன்னமும் அதே விதத்தில் இருந்து வரும் ஒரு கட்டடமான - இரகசிய புலனாய்வு பிரிவினர் போலி அடையாள அட்டைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தி வந்த கட்டடம் - ஒரு நினைவில்லமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்கள் அழைக்கப்பட்டு, தமது அன்புக்குரியவர்களின் அடையாள அட்டையை உண்மையான புகைப்படங்களை பயன்படுத்தி உருவாக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


கிரிமால்டி நினைவிடம் முன்னர் அங்கு துன்பம் அனுபவித்தவர்களின் கவலைகளை ஆற்றும் ஒரு இடமாகவும், அங்கீகாரமளித்து, அவர்களை நினைவுகூரும் ஓர் இடமாகவும் இருந்து வருகின்றது. அது தவிர, அது இந்த நினைவிடத்தின் படிப்பினைகளை புதிய தலைமுறையினருக்கு எடுத்துக் கூறும் ஒரு இடமாகவும் செயற்பட்டு வருகின்றது. கல்விக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இந்த நினைவிடத்தை நிர்வகித்து

வரும் அமைப்பு மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் இந்த இடத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கிறது. இங்கு அடைக்கப்பட்டிருந்து மீண்டு வந்தவர்கள் இத்தகைய சுற்றுலாக்களை வழிநடத்துகின்றனர். அது தொடர்பாக பார்வையாளர்கள் நேரடி அனுபவங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வாயப்பு, கிடைக்கின்றது. ஏனைய மனச்சாட்சி நினைவிடங்களை போலவே, கிரிமால்டி நினைவிடமும் சமூகத்திற்கு மத்தியில் புதிய செயற்பாடுகளை தூண்ட வேண்டுமானால், இன்று மக்களை பெருமளவுக்கு பாதித்து வரும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு உதவக் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. சர்வாதிகார ஆட்சி இன்று இளைய தலைமுறையினருக்கு விட்டுச் சென்றுள்ள மிகவும் அழிவுகரமான எச்சங்களில் ஒன்று, இளைஞர்களுக்கு மத்தியில் செயலூக்கம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகும். பினோசே அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை ஏற்பாடு செய்த இளைஞர்கள் காணாமல் போயுள்ளார்கள்; சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதுடன் மற்றும் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டார்கள். கிரிமால்டி நினைவிடத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை சமகால இளைஞர்களின் முனைப்பான செயற்பாட்டின் வெற்றிகரமான உதாரணங்களை பயன்படுத்திக் கொள்கின்றன. இளைஞர்கள் தாம் மிக முக்கியமானவை என இனங்கண்டு கொண்டிருக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பொருட்டு பாடசாலைகளில் அமுல் செய்வதற்கான திட்டமொன்றை வடிவமைப்பதற்கு அவர்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. கிரிமால்டி நினைவிடம் இன்றைய வகுப்பறையில் முக்கியமான பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் இணைந்து செயற்படுகிறது. புதிதாக குடிவந்தவர்கள் மற்றும் பழங்குடி மக்கள் ஆகியோரை துன்புறுத்துவதற்கூடாக அவர்களை புறமொதுக்கிய வன்முறை கலாசாரம் அரச பயங்கரவாதத்தின் மிகவும் வலுவான எச்சமொன்றாக இருந்து வருகின்றது. இந்த நிலைமையை கவனத்தில் எடுக்கும் பொருட்டு, நினைவிட ஊழியர்கள் இந்த நினைவிடத்தைச் சுற்றி புதிய சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கின்றார்கள். அவை இங்கிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் கதைகளைப் பரிமாறிக் கொள்வதற்கு அப்பால் சென்று, இந்த நினைவிடத்தில் வரலாற்றுக்கும் இன்றைய இளைஞர்கள் எதிர்கொண்டு வரும் சவால்களுக்கும் இடையில் நிலவி வரும் நேரடியான தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்றது. “இனி ஒருபோதும் வேண்டாம்”[10] என்ற குறிக்கோளை சாதித்துக் கொள்ள வேண்டுமானால் இந்த நினைவிடம் பல்வேறு தலைமுறையினருக்கு பல்வேறு

[10] 'இனி ஒருபோதும் வேண்டாம்” என்ற சுலோகம் பல்வேறுபட்ட குழுக்களும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு சுலோகமாக இப்போது உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் அத்தகைய ஒரு சம்பவம் நிகழக்கூடாது என்ற விதத்தில் ஒரு கொடூரச் செயலை நினைவுகூரும் பொருட்டு, இந்தச் சுலோகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முதலில் யூத இன அழிப்பை நினைவுகூரும் விதத்தில் இந்த வாசகம் பயன்படுத்தப்பட்டது. மேர்கேன் என்பவர் 1972 ஆம் ஆண்டில் *Never Again!: A Program for Survival,* என்ற தனது நூலில் இதனை முதலில் பயன்படுத்தினார். பின்னர் யூதத் தலைவர்கள் வேறுபட்ட பல கண்ணோட்டங்களிலும் இந்தச் சுலோகத்தை பயன்படுத்தியுள்ளார்கள். அதனையடுத்து 2003 ஆம் ஆண்டில் அப்ரஹாம் பொக்ஸ்மன் *Never Again!:* என தனது நூலுக்குப் பெயரிட்டார். அப்பொழுது அவர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஒரு சிலர் இந்தச் சுலோகம் யூத இன ஒழிப்பிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களை குறிப்பிடுவதற்காக மட்டும் பயன்படுத்தப்படுகின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், யூத மக்களாகிய எமக்கு அந்த வாசகத்திற்கான பதிப்புரிமை இருந்து வரவில்லை எனக் குறிப்பிட்டார். எவ்வாறிருப்பினும், இந்தச் சுலோகத்தை பல்வேறு குழுக்களும் தொடர்ந்து பயன்படுத்தி வந்துள்ளன. இன அழிப்பினை குறிப்பிடுவதற்காக மட்டுமன்றி ஏனைய பாரிய அளவிலான மனித உரிமை துʻபிரயோகங்களை குறிப்பிடுவதற்கும் இது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

காரணங்களினால் கவர்ச்சிகரமானதாக இருந்து வர வேண்டுமென இந்த நினைவிடத்தின் கல்வியாளர்கள் கருதுகின்றனர்

## லைபீரியா உடல் சித்திரங்கள்: லைபீரிய ஊடக நிலையம் மற்றும் மனித உரிமைகள் ஊடக நிலையம் என்பவற்றின் முன்முயற்சி



ஆபிரிக்காவின் மிகப் பழைமை வாய்ந்த சுதந்திர அரசுகளில் ஒன்றான லைபீரியா 1990 களில் நீண்ட ஒரு சிவில் யுதத்திற்குள் சிக்கிக் கொண்டதுடன், அது ஒட்டுமொத்த மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்தையும் பாதித்தது. சார்பு ரீதியில் அமைதியாக இருந்து ஒரு காலப் பிரிவையடுத்து 1980 இல் முதலாவது வன்முறை அலை அங்கு தோன்றியது. உணவு விலையேற்ற கலவரத்தையடுத்து சர்ஜன்ட் சமிவேல் டோ ஜனாதிபதி டொல்பெட்டின் ஆட்சியை கவிழ்த்தார். ஆளுகை சவால்களையும், பொருளாதார வீழ்ச்சியையும் அடுத்து ஒரு உள்நாட்டு போர் வெடித்தது. லைபீரிய தேசாபிமான முன்னணி சமுவேல் டோ வின் அரசாங்கத்தை வீழ்த்தியது. மோதல்கள் தீவிரமடைந்து 1990 கள் வரை நீடித்தன. ECOWAS சமாதான செயற்பாட்டாளர்களின் தலையீட்டையடுத்து ஒரு போர் நிறுத்த உடன்படிக்கை உருவானதுடன் அது ஜனாதிபதி சார்ல்ஸ் டேலர் அவர்களின் வெற்றிக்கு வழிகோலியது எவ்வாறிருப்பினும், 1999 ஆம் ஆண்டில் மீண்டும் வன்முறை வெடித்தது. கலகக்காரர்களுக்கு அயல் நாடான கயானா உதவி வருவதாக சார்ல்ஸ் டேலர் குற்றம் சாட்டினார். அதே வேளையில், டேலர் சியாராலியோன் கலகக்காரர்களுக்கு உதவி வருவதாக மேற்காபிரிக்க அரசுகள் குற்றம் சாட்டின. 2003 ஆம் ஆண்டில் சார்ல்ஸ் டேலர் தனது ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். 2005 இல் லைபீரியாவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன், உள்நாட்டு போர் இடம்பெற்ற காலப் பிரவின்போது நிகழ்ந்த மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவிருந்தது. சமாதானம், நல்லிணக்கம், தேசிய ஐக்கியம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. சுமார்

இரண்டு தசாப்தம் இடம்பெற்று வந்த தீவிரமான உள்நாட்டுப் போர் மற்றும் டேலர் அரசாங்கத்தின் திட்டமிட்ட முறையிலான அடக்குமுறை என்பவற்றின் விளைவாக குறைந்தது, 250,000 ஆட்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கானவர்கள் பலவந்தமாக இடம்பெயர நேரிட்டது. நாட்டின் பொருளாதாரம் இதன் விளைவாக அழிவுற்றது. லைபீரியா இப்பொழுது ஆபிரிக்காவின் மிக வறுமையான நாடாக இருந்து வருவதுடன், தொடர்ந்தும் உள்கட்டமைப்பு தேவைக் குறைபாடுகளை கொண்டிருப்பதுடன், வேலையில்லா திண்டாட்டம், படிப்பறிவின்மை போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றது. இந்த அவசர தேவைகளின் பின்னணியில் மோதலில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு அங்கீகாரம் வழங்குவது எப்படி? சுமார் இரண்டு தசாப்த காலம் நீடித்த இந்த மோதல் எடுத்து வந்த கடும் மன அதிர்ச்சியை சுகப்படுத்துவதற்கு நினைவு எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும்? 2010 ஏப்ரல் மாதத்தில் லைபீரியா அரசு சாரா அமைப்பொன்றான Civic Initiative [11] கூட்டமைப்பின் உறுப்பினர்கள் லைபீரியா ஊடக நிலையத்தைச் சேர்ந்தவர்கள்[12] தென்னாபிரிக்க மனித உரிமைகள் இல்லத்துடன்[13] கூட்டாக இணைந்து உடல் சித்திர பரிமாற்ற கருத்திட்டமொன்றை ஆரம்பித்தார்கள். அரச சாரா அமைப்பின் மூலம் தூண்டப்பட்ட இந்தக் கருத்திட்டத்திற்கு மனச்சாட்சி சார் மையங்களின் சர்வதேச கூட்டமைப்பு ஆதரவளித்தது. அது மிக மோசமான விதத்தில் மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருந்த லைபீரிய மக்களை ஒன்றிணைத்து, காயங்களை குணப்படுத்தும் ஒரு பொறிமுறையாக நினைவு மற்றும் கலை என்பன வகித்து வரும் பங்கினை எடுத்துக் காட்டுவதே அதன் நோக்கமாக இருந்து வந்தது. மேலும், பரப்புரை செயற்பாடுகளுக்கும் உடல் சித்திரமுறை பயன்படுத்தப்பட்டது. லைபீரியாவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சர்ச்சைக்குரிய பரிந்துரைகள் குறித்து கலந்துரையாடலை தூண்டுவதற்கும் இது மேற்கொள்ளப்பட்டது. “உடல் சித்திரக் கலை” ஒரு கலைசார் சிகிச்சை முறையாகவும், நினைவு கூர்தல் முறையாகவும் இருந்து வருகின்றது. இதில் பங்கேற்பாளர்கள் தமது கடும் மன அதிர்ச்சியூட்டும் அனுபவங்களை தமது உடல் அளவிலான ஒரு படத்தின் மீது எழுதுகிறார்கள்; படங்களாக வரைகிறார்கள். தமது கடந்த கால அனுபவங்களை கண்முன் கொண்டு வந்து, அவர்களுடைய உடலைக் காட்டும் ஒரு வரைபடத்தை தயாரிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பங்கேற்பாளர்கள் தமது மன வடுக்கள், காயங்கள், தாம் அனுபவித்த வேதனை என்பவற்றை இவ்விதம் சித்திரங்களாக வரைகிறார்கள். அதே வேளையில், தமது தொலை நோக்கில் அவர்களை முன்னே உந்திச் சென்ற உறவுகள், தூண்டுதல் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றையும் அவர்கள் வரைகிறார்கள். கடும் மன அதிர்ச்சியை நீண்ட வாழ்க்கைப் பயணத்தின் பின்புலத்தில் வைத்து நோக்குவதே இந்த நுட்பத்தின் நோக்கமாகும். ஒரு குழுச் செயன்முறை என்ற முறையில் பங்கேற்பாளர்கள் தமது சக பங்கேற்பாளர்களுடன் பல்வேறுபட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கின்றார்கள். செயலமர்வுகளின் பல்வேறு கட்டங்களில் இது நிகழ்கின்றது. இந்த அணுகுமுறை வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் தம்மை மீண்டும் ஒரு முறை காண்பதற்கும்,

[11] Civic Initiative is a Liberian Non-profit organization working on transitional justice and peacebuilding issues.
[12] See http://www.lmcliberia.com/
[13] See http://www.hrmc.org.za/

தனிநபரின் கடும் மன அதிர்ச்சியை எடுத்து வரும் அனுபவத்துடன் சேர்த்து பரவலான சமூக அனுபவத்தினை நோக்குவதற்கும் உதவுகின்றது. அத்தகைய ஒரு அணுகுமுறை வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள், கடும் மன அதிர்ச்சி தொடர்பான அனுபவத்துடன் இணங்கிச் செல்வதற்கு அவர்களுக்கு உதவுவதுடன், அது வாழ்க்கையில் பல அனுபவங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது என்ற எண்ணத்தை அவர்களுக்கு மத்தியில் ஏற்படுத்துகின்றது. மேலும், சமூக மீள் ஒருங்கிணைப்பு மற்றும் புண்களை ஆற்றிக் கொள்ளுதல் என்பவற்றுக்கு தேவையான வலிமையையும், ஆதரவையும் அது வழங்குகின்றது. இந்த முறை பன்முகப்பட்ட பங்கேற்பாளர் குழுக்களுடன் பரவலான விதத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதுடன், தமது உடல் ரீதியான மற்றும் உணர்வு ரீதியான துன்பங்களை சமாளிப்பதற்கு பங்கேற்பாளர்களுக்கு உதவுகின்றது. குறிப்பாக, இந்த சித்திரக் கலை முறை ஒருவரின் உடலை பிரதிநிதித்துவப்படுத்தும் உருவங்களை பயன்படுத்துவதன் காரணமாக, அது எச்.ஐ.வி தொற்று உள்ள நபர்கள், மிக மோசமான மனித உரிமை மீறல்களிலிருந்து தப்பிப் பிழைத்தவரகள் மற்றும் பால் நிலை அடிப்படையில் வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் போன்ற நபர்களுடன் பரவலான விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உடல் சித்திரக் கலை ஒரு நுட்பம் என்ற முறையில் மக்கள் கடினமான அனுபவங்களை ஒருவருடன் ஒருவர் புரிந்து கொள்வதற்கான ஒரு பாதுகாப்பான ஊடகத்தை வழங்குகினறது. அவர்கள் விரும்பினால் பரவலாக பொது மக்களுடனும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியும். மனச்சாட்சிசார் மையங்கள் அமைப்பினால் பின்பற்றப்படும் ஒரு நுட்பம் என்ற முறையில், பிரதானமாக மிக மோசமான விதத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்பாக இது பயன்படுத்தப்படுகிறது. இடங்கள் தொடர்பான தமது அனுபவங்களையும், நினைவுகளையும் கிளறிப் பார்ப்பதற்காக தப்பிப் பிழைத்தவர்கள் சித்திரவதை, தடுத்து வைப்பு அல்லது கொலை என்பன நிகழ்ந்த இடத்தின் நினைவுகளை பயன்படுத்துகிறார்கள்.

லைபீரியாவை பொறுத்தவரையில், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இழப்பீடு தொடர்பான கொள்கைகளை அமுல் செய்வதற்கோ அல்லது வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் உடனடி மருத்துவ, நிதி அல்லது நினைவேந்தல் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கோ அரசாங்கம் தயக்கம் காட்டி வரும் ஒரு சூழ்நிலையில், தப்பிப் பிழைத்தவர்களுக்கான ஒரு குணப்படுத்தல் செயன்முறையாக உடல் சித்திரக் கலை அடையாளம் காணப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் தொடர்பாக பரவலாக பொதுமக்கள் விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும் இது மிகப் பொருத்தமான ஒரு முறையாக இருந்து வருகின்றது எனக் கருதப்பட்டது. அது மட்டுமன்றி ஒரு சில சர்வதேச கொடை முகவரகங்கள் நினைவேந்தல் கருத்திட்டங்களுக்கு ஆதரவு கோரி தப்பிப் பிழைத்தவர்கள் முன்வைத்திருக்கும் வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டுள்ளன. சிவில் சமூக அமைப்புக்கள் ஏனைய அவசர அபிவிருத்தி மற்றும் ஆளுகை தொடர்பான பிரச்சினைகளில் முழு கவனத்தையும் செலுத்தி வரும் நிலையில் நிலைத்திருக்கக் கூடிய நினைவேந்தல் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு வரையறுக்கப்பட்ட அளவிலேயே வளங்கள் கிடைக்கின்றன. உடல் சித்திரக் கலை செலவு குறைந்த நினைவேந்தல் கருத்திட்டமொன்று முறையில் மிகப் பொருத்தமான ஒரு பொறிமுறையாக இருந்து

வருகின்றது. வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் தமது தனிப்பட்ட, பெரும்பாலான சந்தர்ப்பங்கள் மிகவும் ஆழமான வேதனையை எடுத்து வரக் கூடிய நினைவுகளை வலுவான விதத்தில் கட்புலனாகும் விதத்தில் எடுத்துக் காட்டி, சான்று பகர்வதற்கு அது வாய்ப்பளிக்கின்றது மேலும் தனிநபர்களின் வரலாறு தொடர்பான விவரணங்களை உருவாக்குவதற்கும் அது உதவுகின்றது. மோதல்கள் தொடர்பான உத்தியோகபூர்வ வரலாறுகளில் பெருமளவுக்கு உள்ளடக்கப்படாத நிகழ்வுகள் தொடர்பான பன்முக பொருள் விளக்கங்கள் மற்றும் பிரதிநிதித்துவம் என்பவற்றை முன்வைப்பதற்கான வாய்ப்பினையும் இந்த உடல் சித்திரக் கலை வழங்குகின்றது. மேலும், கண்ணோட்டங்களை பகிர்ந்து கொள்வதற்கும், பங்கேற்பாளர்களின் கடந்த காலங்களின் பொதுவான குணாதிசயங்களை இனங்கண்டு கொள்வதற்கும் அதனையடுத்து இடம்பெறும் குழு உரையாடல் செயன்முறை அவர்களுக்கு ஊக்கமளிக்கின்றது. சமாதானம் மற்றும் நீதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கற்பித எதிர்காலத்தை எடுத்து வரும் விடயத்தில் அவர்கள் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும் என்பதற்கான வழிமுறைகளையும் அது முன்வைக்கின்றது.

உடல் சித்திரக் கலையில் ஈடுபடும் பெரும்பாலான பங்கேற்பாளர்கள், முறையான லைபீரிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயன்முறையில் பங்கேற்றிருக்கவில்லை. அந்த நிலையில், உடல் சித்திர கருத்திட்டம் கடந்த காலத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கூட்டாக பங்கேற்பதற்கு அவர்களுக்கு கிடைக்கும் முதலாவது வாய்ப்பாக இருந்து வருகின்றது. அது தவிர, தென் ஆபிரிக்க அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் கருத்து பரிமாற்றம் செய்து கொள்வதற்கு அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பும், மற்றொரு மோதலிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் உடல் சித்திரங்களை பார்வையிடுவதற்கு அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பும் வன்முறை தொடர்பான தமது வாழ்க்கை அனுபவங்களை பரந்த சர்வதேச ஆபிரிக்க சட்டத்துக்குள் வைத்து நோக்குவதற்கு இடமளிக்கின்றது. தென் ஆபிரிக்க மோதல் அதிகளவுக்கு உயரளவில் சர்வதேசத்தின் கவனத்தை பெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில், தமது சொந்த மோதல் சர்வதேச பார்வையிலிருந்து ஒதுங்கியிருந்தது என அவர்கள் கருதுகின்றார்கள். எவ்வாறிருப்பினும், இந்தப் பரிமாற்றம் வன்முறை தொடர்பான அவர்களுடைய சொந்த அனுபவங்கள் தொடர்பாக பொதுமக்களின் பரவலான கவனத்தை ஈர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பை வழங்கியது. மிக முக்கியமாக பங்கேற்பாளர்களுக்கு தமது அனுபவங்களை பகிரந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்ததுடன், மற்றவர்களின் நிலைமைகள் தொடர்பான ஒரு பரிவுணர்ச்சியை உருவாக்கிக் கொள்ளும் ஒரு வாய்ப்பும் கிடைத்தது. பலரை பொறுத்தவரையில் இது முதல் தடவையாக நடந்திருந்ததுடன், தமது அனுபவங்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று இப்போது அவர்கள் உணர்கின்றார்கள். இது தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொடர் நடவடிக்கையின் போது, 2010 ஆம் ஆண்டு பங்கேற்பாளர்கள், தமது உடல் சித்திரங்களை மீண்டுமொரு முறை பார்த்து, கடந்த இரண்டு வருட காலங்களில் தமது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து சிந்தித்தார்கள். உடல் சித்திர செயலமர்வு தம்மை பொறுத்தவரையில் ஒரு சாதகமான வலுவூட்டல் அனுபவமாக இருந்து வந்துள்ளது என

பங்கேற்பாளர்கள் கருதினர். அது தமது வாழ்க்கையின் மீது ஒரு ‘கண்ணாடியாக’ இருந்து வருகின்றது எனவும் ஷகுணப்படுத்தும்’ அனுபவமாக இருந்து வருகின்றது எனவும், வருங்காலம் குறித்த ஒரு நம்பிக்கையை தமக்குள் ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர்கள் நினைக்கின்றார்கள். மேலும், தமது கனவு எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் தாம் படிப்படியாக முன்னேறிச் செல்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## மோதலுக்கூடாக நிலைமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நாளாந்த பொருட்கள்: **நினைவுபடுத்தலுக்கூடாக காயங்களை ஆற்றுதல் , வட அயர்லாந்து**



நினைவுபடுத்தலுக்கூடாக காயங்களை ஆற்றும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த "மோதலுக்கூடாக நிலைமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நாளாந்த பொருட்கள்" கண்காட்சி

வட அயர்லாந்து 1960 கள் தொடக்கம் வன்முறையின் ஒரு நிலைக்களனாக இருந்து வந்துள்ளது. சாதாரண மக்களின் மொழி வழக்கில் இந்த வன்முறை குழப்பங்கள் என அழைக்கப்பட்டு வருகின்றன. வட அயர்லாந்தின் அரசியல் யாப்பு அந்தஸ்து தொடர்பாகவே இந்த மோதல் தோன்றியது. வட அயர்லாந்து, அயர்லாந்து யூனியனின் ஒரு பாகமாக இருந்து வர வேண்டுமா அல்லது பெரிய பிரித்தானியாவின் பாகமாக இருந்து வர வேண்டுமா என்ற கேள்விகளின் அடிப்படையிலேயே இது நிகழ்ந்தது. மேலும், இந்த மோதல் சமய அடிப்படையிலான பிரிவினையையும் சாதகமாக கொண்டு இடம்பெற்று வந்துள்ளது. புரட்டஸ்தாந்து யூனியன் வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாக இருந்து வருவதுடன், பெருமளவுக்கு கத்தோலிக்க தேசியவாத சமூகத்தினர் சுதந்திர அயர்லாந்தை ஆதரித்தனர். இந்தக் 'குழப்பங்கள்' 1960 கள் தொடக்கம் 1998 வரையில் இடம்பெற்று வந்ததுடன், பெல்பாஸ்ட் பெரிய வெள்ளிக்கிழமை உடன்படிக்கையையடுத்து முடிவுக்கு வந்தன. இந்த சமாதான உடன்படிக்கை துணைப் படைகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட போர் நிறுத்தம், அயர்லாந்து விடுதலை இராணுவத்தின் ஆயுதங்கள் களையப்படுதல், பொலிஸ் துறை சீர்த்திருத்தம், பெல்பாஸ்ட் வீதிகளிலிருந்து பிரிட்டிஷ் துருப்புக்களை விலக்கிக் கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்த சமாதான ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாக குழப்பங்களின் முடிவை குறித்துக் காட்டிய அதே வேளையில், யதார்த்தம் என்னவென்றால் 2011 ஆம் ஆண்டு வரையிலும் கூட உள்ளூர் சமூகங்களில் தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன என்பதாகும். அயர்லாந்து பிரச்சினை சார்புரீதியில் குறைந்த எண்ணிக்கையிலான முனைப்பான போராளிகள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாக இருந்து வந்த போதிலும், 1960 க்கும் 2001 க்கும் இடைப்பட்ட காலத்தில் இதன் விளைவாக 3,526 பேர் கொல்லப்பட்டதுடன், சாதாரண பிரஜைகளின் அன்றாட வாழ்க்கையும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டிருந்தது. நான்கு தசாப்த காலம் இரண்டு தலைமுறைகளைப் பாதித்த வன்முறையைச் சந்தித்திருக்கும் ஒரு சமூகம் அதன் கடந்த காலத்தை எதிர்கொள்வது எப்படி? ஆழமாக பிளவுண்டிருக்கும் ஒரு

சமூகத்தை சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஒரு பொது நோக்குக் குறித்து உரையாடலொன்றை ஆரம்பிப்பதற்கு எவ்வாறு தூண்ட முடியும்? சாதாரண பிரஜைகளின் வன்முறை மற்றும் மன அதிர்ச்சி தொடர்பான நாளாந்த அனுபவங்களை எவ்வாறு அங்கீகரிக்க முடியும்? மக்களின் காயங்களை ஆற்றுவதற்கு பங்களிப்புச் செய்யக் கூடிய மிகப் பெரிய பொறிமுறைகள் எவை?

2002 ஆம் ஆண்டு தொடக்கம் வட அயர்லாந்திலிருந்து செயற்படும் Healing Through Remembering (HTR) [14] என்ற பெயரிலான நினைவுபடுத்தலுக்கூடாக சுகப்படுத்துதல் கூட்டமைப்பு உயிரோட்டமான நினைவு அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது. இந்த அருங்காட்சியகத்தை உருவாக்குவதற்கான கருத்து இந்த அமைப்பு நடத்திய பொதுமக்கள் கலந்தாலோசனை செயன்முறை ஒன்றுக்கூடாக தோன்றியது. வட அயர்லாந்து, இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து குடியரசு என்பவற்றைச் சேர்ந்த பங்கீடுபாட்டாளர்களுடன் தொடரான கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. இந்த மோதல் குறித்த கண்ணோட்டங்களை சிறப்பாக புரிந்து கொள்வதும், இந்த மோதலை நினைவுபடுத்திக் கொள்ளக் கூடிய மிகச் சிறந்த வழி முறைகள் எவை என்பது குறித்து மக்களின் கருத்துக்களை கேட்பதுமே இக்கலந்தாலோசனையின் நோக்கமாகும். இந்த செயன்முறையிலிருந்து HTR அமைப்பு உயிரோட்டமான நினைவு அருங்காட்சியக உப குழுவை அமைத்ததுடன், அந்தக் குழு நினைவு, நினைவுச் சின்னம் அமைத்தல் மற்றும் உயிரோட்டமான நினைவுகூர்தல் அருங்காட்சியகத்தை அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான தலைப்புக்களில் ஆலோசனைகளையும், உரையாடல்களையும் நடத்தி வந்துள்ளது.

மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுவதற்கும், அவர்களை நினைவுகூருவதற்கும் ஒரு நினைவிடம், ஒரு அருங்காட்சியகம் மற்றும் சமாதான பூங்காக்கள் என்பன நிறுவப்பட வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும், அருங்காட்சியகம் தொடர்பான உப குழு நினைவிடங்களை உருவாக்கும் செயல்களும் கூட, குறிப்பாக வட அயர்லாந்து போன்ற எளிதில் புண்படக்கூடியதாக இருந்து வரும் ஒரு சமூகத்தில் மோதலுக்கும், போட்டிகளுக்கும் வழிவகுக்க முடியும் என்ற விடயத்தை உணர்ந்து கொண்டது. வட அயர்லாந்து வன்முறையை கவனத்தில் எடுக்கும் ஒரு சில நினைவுச் சின்ன கருத்திட்டங்கள் இருந்து வரும் அதே வேளையில், அல்ஸ்டர் அருங்காட்சியகத்தின் அயர்லாந்து மோதல் தொடர்பான கண்காட்சி போன்ற ஏற்கனவே இருந்து வரும் நினைவிடங்கள் கருத்து வேறுபாடுகளை தோற்றவித்திருப்பதுடன், கடுமையான விமர்சனங்களையும் எடுத்து வந்துள்ளன. எனவே, இந்த அருங்காட்சியக உப குழு, அதன் நினைவுச் சின்னப் பணிக்கூடாக மனித நேய பிரச்சினைகளை கவனத்தில் எடுக்கும் உயிரோட்டமான, பங்கேற்பு இயல்பிலான நினைவுகூர்தல் அருங்காட்சியகமொன்றை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்தகைய அருங்காட்சியகமொன்றின் முக்கியமான நோக்கங்கள் அனைவருக்கும் இறந்த காலத்தை

[14] See http://www.healingthroughremembering.org/

நினைவுகூர்வதற்கும், அது குறித்து சிந்திப்பதற்கும் ஒரு பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கக் கூடிய ஒரு வெளியை வழங்குவதும், அதே போல மீண்டும் வன்முறை இடம்பெறுவதற்கு பங்களிப்புச் செய்யாத விதத்தில் கடந்த கால நிலைமைகள் குறித்த கல்வி மற்றும் உரையாடல் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுப்பதன் மூலம் மக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துதல் என்பனவுமாகும். அத்தகைய ஒரு இலட்சியத்தை சமூகத்தின் முழுமையான பங்கேற்புடன் கூடிய ஒரு பொறிமுறைக்கூடாக மட்டுமே சாதித்துக் கொள்ள முடியும் என்ற விடயத்தை ஏற்றுக் கொள்ளும் விதத்தில், அது சமூகத்தில் பல்வேறு தரப்பினருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றது. இந்த உப குழு பரவலான பங்கேற்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளுதல் என்பன தொடர்பான கோட்பாடுகளின் அடிப்படையில் கண்காட்சியொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டில் HTR அமைப்பு மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டமைப்பின் ஆதரவுடன் அதன் உயிரோட்டமான அருங்காட்சியகத்திற்கென "மோதலினால் நிலைமாற்றப்பட்ட நாளாந்த பொருட்கள் என்ற தலைப்பிலான கண்காட்சியை ஆரம்பித்தது. இன்னமும் ஆரம்ப கட்டத்தில் இருந்து வரும் இந்தக் கருத்திட்டம், நினைவு, மோதல், அடையாளம் மற்றும் பிரிவினை என்பன தொடர்பான உரையாடல்களை முன்னெடுக்கும் பொருட்டு தனிநபர்களிடமும், சமூகங்களிடமும் காணப்படும் உபயோக பொருட்களின் கலாசாரத்தை பயன்படுத்திக் கொள்கின்றது. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களும், குழுக்களும் புகைப்படங்கள், கலைப்பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்ற தமது சொந்தப் பொருட்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். கூட்டு மற்றும் சமூக நினைவேந்தல் வடிவங்களை முன்னெடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மோதலின் பன்முக கண்ணோட்டங்கள் குறித்த ஒரு புரிந்துணர்வை மேம்படுத்துவதும் அதன் நோக்கமாகும். பரந்த அடிப்படையிலான நல்லிணக்க செயன்முறைகளுக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய ஒரு கூட்டு கதையாடலை உருவாக்குவதற்காக தனிப்பட்டவர்களின் கதைகளை தாக்கமான விதத்தில் அது பயன்படுத்திக் கொள்கின்றது.



# முடிவுரை

## நினைவுச் சின்ன கருத்திட்டமொன்றை ஆரம்பிக்கும் பொழுது கவனத்தில் எடுக்க வேண்டிய கேள்விகள் - பரீட்சிப்புப் பட்டியல்

மனச்சாட்சிசார் மையங்கள் எடுத்துக் காட்டுவதைப் போல ஒரு மோதலின் அனைத்துக் கட்டங்களின் போதும் நினைவுச் சின்னங்களை உருவாக்கும் முன்முயற்சிகள் இடம்பெற முடியும். எனினும், மோதல் முடிவடைந்த பின்னர் நினைவுச் சின்னங்களை நிறுவும் பொழுது, அதன் வெற்றி பெருமளவுக்கு, அதனை அபிவிருத்தி செய்வதற்கென மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளிலேயே தங்கியுள்ளது.

நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு தயாராகும் பொழுது கவனத்தில் எடுக்க வேண்டிய ஒரு சில முக்கியமான கேள்விகள் வருமாறு:

√ **இலக்குகள்**: இம்முயற்சியின் நோக்கம் என்ன? உயிர் பிழைத்தோரையும், பாதிப்புற்றோரையும் அங்கீகரிப்பதா? அது நல்லிணக்கத்தை போஷித்து வளர்க்கின்றதா மக்கள் பங்களிப்பு உள்ளதா மற்றும் சனநாயகத்தை கட்டியெழுப்ப துணை நிற்கின்றதா? தற்போது இடம்பெற்று வரும் உண்மையை கூறும் செயற்பாட்டில் இதுவும் ஓர் அங்கமா? கடந்த கால நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கென மக்களுக்கு கல்வியூட்டுவதில் அது கவனம் செலுத்துகின்றதா?

√ **உரிய காலம் மற்றும் நிரலொழுங்கு:** பங்குதாரர்கள் இதில் பங்கேற்க ஆயத்தமாக உள்ளார்களா? இந்தக் கருத்திட்டம் எழுப்பும் பிரச்சினைகளுடன் தங்களை சம்பந்தப்படுத்திக் கொள்வதற்கு பொதுமக்கள் தயாராக இருந்து வருகின்றார்களா? அல்லது அது வெளியில் தெரியாத, தீர்க்கப்படாத பதற்ற நிலைமைகள் தலைதூக்குவதற்கு இடமளிக்குமா? நிலைமாற்றக் கால நீதி மற்றும் போருக்குப் பிற்பட்ட மீள் கட்டுமானம் போன்ற பொறிமுறைகளுடன் இக்கருத்திட்டம் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது? உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவொன்றின் பரிந்துரைகளை அது முன்னெடுக்கின்றதா?

√ **ஆரம்பிப்போர்:** இத்திட்டத்தை ஆரம்பிப்போர் யாவர்? சமூகத்திலே இதனை ஆரம்பிப்பதற்கான அதிகாரமும், பங்குதாரர்களின் ஒத்துழைப்பும் இவர்களுக்கு இருக்கின்றதா?

√ **பங்குதாரர்கள்:** இத்திட்டத்தின் முக்கிய பங்குதாரர்கள் யாவர்? இத்திட்டத்தில் யாருடைய கதைகள் இடம்பெற வேண்டும்? பங்குதாரர்கள் இத்திட்டத்தை ஆரம்பிக்காவிட்டால், அவர்களிடம் இத்திட்டம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டதா? இவர்கள் எவ்வாறு திட்டத்திற்குள் உள்ளடக்கப்படுவார்கள்? இத்திட்டத்தின் முக்கியமான இலக்குக் குழுக்கள் எவை?

√ **வளங்கள்:** இத்திட்டத்திற்கு கிடைக்கும் வளங்கள் எவை? வளங்கள் கிடைக்கும் நிலையில், கருத்திட்டத்தின் குறிக்கோளின் அடிப்படையில் இக்கருத்திட்டத்துக்கான மிகவும் பொருத்தமான வடிவம் எதுவாக இருக்க முடியும்,? அது அருங்காட்சியகமாக,

நினைவிடமாக அல்லது ஒரு நினைவேந்தல் கருத்திட்டமாக இருந்து வருமா? உரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக, இதற்கென தற்போதைய அமைவிடமொன்றை புதுப்பிக்க முடியுமா?

√ **கலந்தாலோசனைகள்:** கலந்தாலோசனைகள், பங்குதாரர்கள் மற்றும் பொது மக்களோடு தகவல் பரிமாற்றம் என்பவற்றுக்கான திட்டங்கள் என்ன? திட்டத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளடக்கப்பட வேண்டியவர்கள் யாவர்? ஆரம்பித்தோர் மற்றும் பங்குதாரர்கள் மத்தியில் தொடர்ச்சியான தொடர்பாடலை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பொறிமுறைகள் எவை?

√ **மக்கள் விழிப்புணர்வு:** இத்திட்டம் குறித்து விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை நீங்கள் பொறுப்பெடுப்பீர்களா? இது ஓர் தேசிய திட்டமாக இருந்தால் பரவலாக பொது மக்களை உள்ளடக்கிக் கொள்வதற்கும், விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்ன?

√ **ஆராய்ச்சி**: எதற்காக, என்ன ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்? இந்த ஆராய்ச்சி நேர்காணல்கள், கிராம கூட்டங்கள், இலக்குக் குழு கலந்துரையாடல்கள் அல்லது பொது மதிப்பீட்டாய்வுகள் என்பவற்றின் வடிவில் மேற்கொள்ளப்படுமா? ஆவணச் சேகரிப்புக்கு, ஒரு கண்காட்சியை உருவாக்குவதற்கு இந்த ஆராய்ச்சி பயன்படுத்தப்படுமா? அல்லது அது சுவடிகளின் ஒரு பாகமாக இருந்து வருமா?

√ **தொடர்புகளை ஏற்படுத்தல்:** உங்கள் திட்டம் எவ்வாறு மற்றைய திட்டங்களுக்கு அறிவிக்கப்படும்? மற்றைய திட்டங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவீர்களா?

√ **நீண்ட கால நோக்கு:** கருத்திட்டத்தின் நீண்ட கால நோக்கு என்ன? இக்கருத்திட்டம் பங்குதாரர்களினதும், பரந்த சமூகத்தினதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதனை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்கள்? தொடர்ச்சியான மக்கள் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறிப்பிட்ட எவையேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுமா?

மனச்சாட்சியின் தளங்களின்
சர்வதேச கூட்டணி

நினைவிலிருந்து நடவடிக்கை

www.sitesofconscience.org